இதழ் - 01




# மாநகரம்

## ஓராண்டு செயலறிக்கை

2018 / 2019

## மாநகர சபை - மட்டக்களப்பு

# மாநகர சபை மட்டக்களப்பு

# ஓராண்டு செயலறிக்கை

2018 சித்திரை தொடக்கம் 2019 சித்திரை வரை

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | வீதி அபிவிருத்திப் பணிகள் | 01 |
| 2. | வீதி மின் விளக்குகள் | 11 |
| 3. | வீதி விபத்துக்களை கட்டுப்படுத்தல் | 12 |
| 4. | புதிய வீதி சமிஞ்ஞை விளக்கு | 12 |
| 5. | புதூர் சந்தியில் ஓர் பேருந்துத் தரிப்பிடம் | 14 |
| 6. | மட்டக்களப்பு நகரை அழகுபடுத்தும் செயற்பாடுகள். | 14 |
| 7. | வாவிக்கரை பூங்கா | 15 |
| 8. | பசுமையான மாநகரினை உருவாக்கும் செயற்றிட்டம் | 15 |
| 9. | மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித் திட்டங்கள் | 16 |
| 10. | கௌரவ முதல்வரின் வேண்டுகோளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்ட பணிகள் | 17 |
| 11. | திரவக் கழிவு சேகரிப்பு நிலையத்திற்கான சுற்றுமதில் | 18 |
| 12. | "உயிர் வாயு கலன்" | 19 |
| 13. | புதிய வாகனங்கள் கொள்வனவு | 20 |
| 14. | விஷேட படையணி | 21 |
| 15. | ஜெய்க்கா நிறுவன தொண்டர்களின் பணி | 21 |
| 16. | நகரை முழுமையான CCTV கண்காணிப்பில் கட்டுப்பாட்டில் கொணர்தல் | 22 |
| 17. | இயற்கை நீரோட்டப் பாதைகளை புனரமைத்தல் | 23 |
| 18. | 4 பேர்ச்சஸ் காணியிலும் கட்டிடங்கள் அமைப்பதற்கான தீர்மானம். | 24 |
| 19. | மட்டக்களப்பு மாநகரசபை பதில் சிற்றூழியர்கள் நியமனம். | 24 |
| 20. | மாநகர தையல் பயிற்சி நிலையத்தினை மேம்படுத்தல் | 25 |
| 21. | சுகாதாரமான விலங்கறுமனை (Slaughter house) | 26 |
| 22. | வாராந்த சந்தைகள் | 26 |
| 23. | நுண்கடன் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல் | 27 |
| 24. | வருமான அறவீட்டு மாதம் | 28 |
| 25. | நூலகர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு | 28 |
| 26. | மாநகருக்குள் அரச ஹோமியோபதி வைத்தியசாலை | 29 |
| 27. | பொது போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கும் இடையூறாக இருக்கும் மரங்களை அகற்றுதல் | 31 |
| 28. | உணவகங்களுக்கான தரச் சன்றிதல்களை வழங்கல் | 32 |
| 29. | தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல் | 33 |
| 30. | டெங்கு அபாயமற்ற மாநகரை உருவாக்குதல். | 34 |
| 31. | ஓர் நாளைக்கு இரண்டு வேளை திண்மக்கழிவு அகற்றல் செயற்பாடுகள் | 34 |
| 32. | சாப்புச் சட்ட நடைமுறைப்படுத்தல் | 35 |
| 33. | நானாவிதப் பகுதிக்குரிய மென்பொருள் நிறுவல் (online payment) | 35 |
| 34. | பௌர்ணமிக் கலை விழா | 36 |
| 35. | வியாபார நிலையங்களின் பெயர்ப்பலகைகளை ஒழுங்கமைத்தல் | 36 |
| 36. | ஆசிய மன்றத்தின் (Asia Foundation) நிதி அனுசரணையுடனான வேலைத் திட்டங்கள். | 37 |
| 37. | தேசிய வாசிப்பு மாதம். | 38 |
| 38. | உப விதிகளை உருவாக்குதல் பற்றிய கலந்துரையாடல் | 40 |
| 39. | பொது நூலகம் | 41 |
| 40. | இலத்திரனியல் பெயர்ப் பட்டியல் மற்றும் பொதுத் தரசினை நிறுவுதல் | 42 |
| 41. | நவீன மயப்படுத்தப்பட்ட கல்லடி பொதுச் சந்தை | 43 |
| 42. | வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் திட்டம் | 44 |
| 43. | முதல்வரிடம் சொல்லுங்கள் "Tell to Mayor" | 44 |
| 44. | வெபர் உள்ளக அரங்கினை விளையாட்டு வீரர்களின் பாவனைக்காக திறந்து விடல் | 45 |
| 45. | சிறுவர் நேய மாநகரமாக மட்டக்களப்பு மாநகர சபை | 46 |
| 46. | வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளில் மாநகர சபை | 47 |
| 47. | மாநகர சபையுடன் இணைந்து செயற்பட்டு வரும் தொண்டர் குழுக்கள் | 48 |
| 48. | மாநகர சபைக்கு விஜயம் செய்த பிரமுகர்கள் | 51 |

# 01. வீதி அபிவிருத்திப் பணிகள்

## சபையின் சொந்த நிதியின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்திப் பணிகள்.

மட்டக்களப்பு மாநகர சபையின் ஆட்சி அதிகாரத்தினை 2018ஆம் ஆண்டு சித்திரை மாதம் முதல் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமையிலானது மக்கள் பிரதிநிதிகள் சபை கையேற்ற வேளை பல வீதிகள் மக்களின் அன்றாட போக்குவரத்துக்கு ஏற்றதாக அமைந்திருக்கவில்லை. எனவே குறித்த வீதிகளை துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலை காணப்பட்டது. இதனடிப்படையில் எமது மாநகர சபையின் வேலைகள் மற்றும் அபிவிருத்தி நிலையியற் குழுவினால் தயாரிக்கப்பட்ட முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில் பின்வரும் வீதிகள் எமது மாநகர மக்களின் வரிப்பணத்தின் மூலமாக புனரமைப்பு செய்யப்பட்டன. இதற்காக **BMC/GM-08(10)/2018-25** எனும் சபைத் தீர்மானமும் உயரிய சபையின் ஊடாகப் பெறப்பட்டதுடன் கிட்டத்தட்ட 32 மில்லியன் ரூபாய்கள் செலவு மதிப்பீட்டில் இவ் வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

01. கல்லடி, மாரியம்மன் கோயில் 2ம் குறுக்கு வீதி கொங்கிறீட்டிடல்.
02. பெரிய ஊறணி, காளி கோயில் 1ம் குறுக்கு வீதி தாரிடல்.
03. சின்ன உப்போடை, 1ம் குறுக்கு வீதி தாரிடல்.
04. வாவிக்கரை வீதி, திரௌபதையம்மன் கோயில் வீதி கொங்கிறீட்டிடல்.
05. புளியந்தீவு, மாணிக்கம் வீதி, 1ம் குறுக்கு கொங்கிறீட்டிடல் .
06. நொச்சிமுனை, சோதி லேன் தாரிடல்.
07. புதூர், எல்லை வீதி, 2ம் குறுக்கு கொங்கிறீட்டிடல்.
08. கண்ணகியம்மன் கோயில் வீதி, 12ம் குறுக்கு கொங்கிறீட்டிடல்.
09. திருப்பெருந்துறை, 7ம் குறுக்கு வீதி கொங்கிறீட்டிடல்.
10. மஞ்சந்தொடுவாய், கிளூறியா வீதி, 1ம் குறுக்கு கொங்கிறீட்டிடல்.
11. அமிர்தகழி, பாடசாலை வீதி தாரிடல்.
12. சத்துருக்கொண்டான், 5ம் குறுக்கு வீதி தாரிடல்.
13. திராய்மடு, 20ம் குறுக்கு வீதி தாரிடல்.






## ஏனைய உள்ளூராட்சி சபைகளுக்கு முன்மாதிரியாக மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்திப் பணிகள்.

மட்டக்களப்பு மாநகர சபையானது மக்களுக்கான வீதி அபிவிருத்தி பணிகளை அனைத்து அரச திணைக்களங்களும் கையாள்வது போன்று ஒப்பந்தம் வழங்கி விட்டு வேடிக்கை பார்ப்பதைத் தவிர்த்து அப்பணிகளை மாநகர சபையே பொறுப்பேற்று அதனிடமுள்ள ஆளனி மற்றும் இயந்திர வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி ஏற்படக் கூடிய நிர்வாக செலவுகள் மற்றும் ஒப்பந்த தரகுப்பண வழங்கல்கள் என்பவற்றை தவிர்த்து ஒதுக்கீடு செய்யப்பட்ட பணமானது முழுமையாக அவ் வீதி வேலையிலேயே பயன்படுத்தப்பட்டதன் ஊடாக மதிப்பிட்டு திட்டமிடப்பட்ட வீதியின் நீளத்தை விட 30% தொடக்கம் 45% வீதமான வேலைகளை மேலதிகமாக மேற்கொண்டதுடன் கலப்படமற்றதும் உன்னத தரமானதுமான சிறந்த வீதி அபிவிருத்தியை மேற்கொண்டு மக்களுக்கு கையளித்துள்ளது.

இதற்கு உதாரணமாக கடந்த (2018) ஆண்டில் மேல்மாகாண மற்றும் பெருநகர அபிவிருத்தி அமைச்சின் **சுகித புரவர** வேலைத் திட்டத்தில் கொங்றிட் இடுவதற்கு என ஒதுக்கப்பட்ட 31 மில்லியன் ரூபாய் பணத்திற்கு மேலதிகமாக 38 மில்லியன் ரூபாய்களுக்குரிய வேலைகள் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. கடந்தகால நடைமுறையின்படி ஒதுக்கப்படும் பணத்தினை ஒப்பந்ததாரருக்கு வழங்கும் போது 23% மான பணமானது இலாபம் மற்றும் தரகுச் செலவுகள் என்பவற்றுக்காக கழிக்கப்பட்டு மிகுதி 77% மான பணத்திற்கான வேலையே அங்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும். இந்த நிலை மாநகர சபையின் நேர்மையான இறுக்கமான செயற்பாட்டினால் மாற்றப்பட்டு வெளிப்படைத்தன்மையான அபிவிருத்திப் பணியாக அது மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இதனை மேலும் தெளிவாகக் கூறுவதனால் கிட்டத்தட்ட 01 மில்லியன் ரூபாய் பணமானது 3.5 மீற்றர் அகலமான வீதி ஒன்றிற்கு தார் இடுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு அதனை ஒப்பந்தகாரர் ஊடாக மேற்கொள்ளும் போது மொத்தமாக 100 மீற்றர்களே தாரிட முடியும். ஆனால் அதே வீதி வேலையை மாநகர சபை மேற்கொள்ளும் போது 180 மீற்றர் வரை நீடித்து மேற்கொள்ள முடிந்துள்ளது.



அதேபோன்று கொங்கிறீட் வீதிகளைப் பொறுத்தவரையில் 01 மில்லியன் ரூபாய் பணத்தில் 4 மீற்றர்




அகலமான வீதியாயின் 160 மீற்றர்கள் வரையில் அபிவிருத்தி செய்ய முடிகின்றது. அதுமட்டுமன்றி இத்தகைய வீதிக்கு தரம் நிறைந்ததும், துரிதமானதுமான உடன் கலவையினை (Ready mix) கொள்வனவு செய்து பயன்படுத்துவதனால் ஆகக் கூடியது 3 நாட்களுக்குள்ளேயே அவ் வீதியினை அபிவிருத்தி செய்து நிறைவுறுத்த முடிகின்றது. இதன் மூலம் பொது மக்களின் அன்றாடப் போக்குவரத்துக்கான இடைஞ்சல்கள் நிவர்த்தி செய்யப்படுகின்றன.

இத்தகைய செயற்பாடுகளை அவதானித்த அமைச்சுகளின் செயலாளர்கள் இதே போன்று மத்தியரசின் ஊடாக வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் பணத்தினை நேரடியாக மாநகர சபையே மேற்கொள்வதற்கான அனுமதியையும், சிபார்சுகளையும் வழங்கியிருந்தார்கள். இதன்படி கம்பெரலிய திட்டம் உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்களின் ஊடாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களால் மாநகர நிர்வாக எல்லைக்குள் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளுக்கான பெரும்பாலான வேலைகளை மாநகர சபையே பொறுப்பேற்று மேற்கொண்டும் வருகின்றது.



இதனால் மத்தியரசின் ஒதுக்கீடுகளை நேரடியாக உள்ளூராட்சி மன்றம் ஒன்றிற்கு வழங்கும் நடைமுறையை முதற்தடைவையாக மட்டக்களப்பு மாநகர சபையின் வினைத்திறனான ஊழலற்ற செயற்பாடுகள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளன.

எனவே, மட்டக்களப்பு மாநகர சபையானது ஏனைய சபைகளுக்கு முன் உதாரணமாக இருந்து விளைதிறனுடன் கூடிய வினைத்திறனான அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருவதனால் இலங்கையில் உள்ள பிற சபைகளும் மாநகர சபையின் பணிகளை பார்வையிட்டுச் செல்வதுடன், சபையில் மேற்கொள்ளப்படும் சிறந்த தீர்மானங்களையும் தமது சபைக்கு கொண்டு சென்று அவர்களும் இது போன்ற மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளை தமது இடப்பரப்பினுள் மேற்கொள்வதற்கான முயற்சிகளையும் எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சுகித புரவர வேலைத்திட்டம்



கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஶ்ரீநேசன் அவர்களின் சிபார்சின் ஊடாக மாநகர முதல்வர் கௌரவ தியாகராஜா சரவணபவன், பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு.பொன்னையா சுரேஸ் அவர்களிடம் விடுத்த வேண்டுகோளிற்கு இணங்க பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் 31 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதற்கமைய மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பின்வரும் 16 வீதிகளை மாநகர சபையே அதனிடமுள்ள ஆளனி மற்றும் இயந்திர வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி ஒதுக்கீடு செய்யப்பட்ட பணமானது முழுமையாக அவ் வீதி வேலையிலேயே பயன்படுத்தப்பட்டதன் ஊடாக மதிப்பிட்டு திட்டமிடப்பட்ட வீதியின் நீளத்தை விட மேலதிகமாக மேற்கொண்டுள்ளது.



| இல. | வீதியின் பெயர் | மதிப்பீட்டு நீளம் | அமைச்சின் ஒதுக்கீடு | மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட்டதால் | |
|---|---|---|---|---|---|
| | | | | மொத்த நீளம் | அகலம் |
| 01 | நாவற்குடா, கிழக்கு 04 ஆம் குறுக்கு | 131.0 | 1,980,000.00 | 176.5 | 3.6 |
| 02 | பாலமீன்மடு, குழந்தை யேசு வீதி | 120.0 | 1,980,000.00 | 199.6 | 3.6 |
| 03 | சத்துருகொண்டான், லங்கா மாதா ஆலய வீதி | 100.0 | 1,980,000.00 | 150.2 | 4.5 |
| 04 | நொச்சிமுனை, இசை நடனக் கல்லூரி வீதி | 119.0 | 1,980,000.00 | 159.9 | 4.0 |
| 05 | பூநொச்சிமுனை, 5ஆம் குறுக்கு வீதி | 100.0 | 1,980,000.00 | 168.3 | 4.5 |
| 06 | புதுநகர், 4ஆம் குறுக்கு வீதி | 131.0 | 1,980,000.00 | 197.5 | 3.6 |
| 07 | நாவற்குடா, சாரதா வீதி | 131.0 | 1,980,000.00 | 172.5 | 3.6 |
| 08 | நாவற்குடா கிழக்கு, தேவாலய வீதி | 119.0 | 1,980,000.00 | 146.7 | 4.0 |
| 09 | கருவேப்பங்கேணி, சிவநாகதம்பிரான் வீதி | 131.0 | 1,980,000.00 | 160.1 | 3.6 |
| 10 | திசவீரசிங்கம், குறுக்கு வீதி | 131.0 | 1,980,000.00 | 187.1 | 3.6 |
| 11 | கருவேப்பங்கேணி, விபுலானந்தா வீதி. | 131.0 | 1,980,000.00 | 183.6 | 3.6 |
| 12 | கருவேப்பங்கேணி, செழியன் வீதி. | 131.0 | 1,980,000.00 | 168.5 | 3.6 |
| 13 | ஜெயந்திபுரம், ஜெயந்தி வீதி. | 131.0 | 1,980,000.00 | 179.5 | 3.6 |
| 14 | நொச்சிமுனை, கலைமகள் 1ஆம் குறுக்கு வீதி. | 131.0 | 1,980,000.00 | 237.1 | 3.6 |
| 15 | முதலாம் குறுக்கு, திருமலை வீதி, சின்ன ஊறணி. | 61.0 | 990,000.00 | 80.2 | 3.6 |
| 16 | திசவீரசிங்கம், குறுக்கு வீதி. | 131.0 | 1,980,000.00 | 198.1 | 3.6 |

## அவசர அவசிய நிலைமைகளைக் கருத்தில் கொண்டு வீதிகளை தற்காலிகமாக சீர் செய்தல்



மாநகர நிர்வாக எல்லைக்குள் மழை காலங்களில் பல வீதிகள் மக்களின் அன்றாட போக்குவரத்து செயற்பாடுகளுக்கு இடையூறாக அமையும் வகையில் காணப்படுகின்றன. இவ் வீதிகள் அனைத்தையும் பருவ மழை காலம் நெருங்குவதற்கு முன் பூரணமாக சீரமைக்க மாநகர சபையின் நிதி நிலைமைகள் இடமளிக்காத காரணத்தினால் மக்களின் சீரான போக்குவரத்து செயற்பாடுகளுக்கு வழியமைத்துக் கொடுக்கும் நோக்கில் தற்காலிகமாக (ABC) கலவைகள் பயன்படுத்தப்பட்டு சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.



இதற்காக 200 கியூப்பிற்கும் அதிகமான ஏபிசி (ABC) கலவை பயன்படுத்தப்பட்டு பின்வரும் உள்ளக வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டன.

| | |
|---|---|
| 01. | வேலூர் - 04ஆம் குறுக்கு. |
| 02. | தோமஸ் அண்டனி வீதி – திருச்செந்தூர். |
| 03. | 07ஆம் 08 ஆம் இணைப்பு ஒழுங்கைகள் - கல்லடி. |
| 04. | தன்வந்திரி வைத்தியசாலை வீதி – கல்லடி. |
| 05. | மயாநாட்சி அம்மன் கோயில் வீதி - சின்ன ஊறணி. |
| 06. | சிவன் கோயில் வீதி – சின்ன ஊறணி. |
| 07. | 3ஆம் குறுக்கு - புதிய எல்லை வீதி. |
| 08. | கலைமகள் குறுக்கு வீதி - 14ஆம் வட்டாரம். |
| 09. | 13ஆம் குறுக்கு, திராய்மடு. |
| 10. | 04 ஆம் குறுக்கு – நாவற்குடா. |
| 11. | 07 ஆம் குறுக்கு மிகுதி – வேலூர். |
| 12. | இராசநாயகம் குறுக்கு – பாலமீன்மடு. |
| 13. | விபுலானந்தர் வீதி - கல்லடி. |
| 14. | இசை நடனக் கல்லூரி வீதி, முதலாம் குறுக்கு. |



## கம்பெறலிய துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சினால் தற்போது நாடு பூராகவும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கம்பெறலிய துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக இதுவரை 60 இற்கும் அதிகமான வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன.



தேசிய கொள்கைகள், பொருளாதார விவகார அமைச்சிடம் இராஜாங்க அமைச்சர் அலிசாஹிர் மௌலான மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து ஸ்ரீநேசன் மற்றும் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகியோர் விடுத்த சிபார்சுகளுக்கு அமைய மட்டக்களப்பு மாநகர நிர்வாக எல்லைக்குள் கிட்டத்தட்ட 110 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் நிறைவுறுத்தப்பட்டுள்ளன.

பொதுவாக மக்களுக்கான வீதி அபிவிருத்தி பணிகளை அரச திணைக்களங்கள் பல கையாள்வது போன்று ஒப்பந்தம் வழங்கி விட்டு வேடிக்கை பார்ப்பதைத் தவிர்த்து இவ் அபிவிருத்தி பணிகளை மாநகர சபையே பொறுப்பெற்று தம்மிடமுள்ள ஆளனி மற்றும் இயந்திர வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி மேற்கொண்டு வருகின்றது. இதனால் ஏற்படக் கூடிய நிர்வாக செலவுகள், மற்றும் ஒப்பந்த தரகுப்பண வழங்கல்கள் என்பவற்றையும் தவிர்த்து ஒதுக்கீடு செய்யப்பட்ட பணமானது முழுமையாக அவ் வீதி வேலையிலேயே பயன்படுத்தப்பட்டமையால் மதிப்பீட்டு திட்டமிடப்பட்ட வீதியின் நீளத்தை விட 30% தொடக்கம் 45% வீதமான வேலைகளை மேலதிகமாக மேற்கொள்ள முடிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.





| இல | ஒதுக்கீடு செய்தவர். | வீதியின் பெயர் | ஒதுக்கீடு (மில்லியன்) |
|---|---|---|---|
| 01 | கௌரவ.ஞா.ஸ்ரீநேசன் பாராளுமன்ற உறுப்பினர். | அமிர்தகழி சுக்குறு வீதிக்கு கொங்றிட் இடல் | 2.0 |
| 02 | | திராய்மடு, பத்தினி அம்மன் கோயில் 2ஆம் குறுக்கு கொங்றிட் இடல் | 1.5 |
| 03 | | கொக்குவில் ‘A’ வலய, பாடசாலை வீதி கொங்றிட் இடல் | 1.5 |
| 04 | | சத்துருகொண்டான், பிள்ளையார் கோயில் மணல் வீதி கொங்றிட் இடல் | 1.5 |
| 05 | | பிள்ளையாரடி, மன்றேசா வீதி கொங்றிட் இடல் | 1.5 |
| 06 | | சின்ன ஊறணி, பேச்சி அம்மன் கோயில் வீதி முதலாம் குறுக்கு கொங்றிட் இடல். | 2.0 |
| 07 | | புன்னைச்சோலை குமாரபுரம் 01ஆம் குறுக்கு கொங்றிட் இடல் | 1.5 |
| 08 | | கூழாவடி, எல்லை வீதி 3ஆம் குறுக்கு கொங்றிட் இடல். | 1.5 |
| 09 | | புன்னைச்சோலை, சேமக்காலை வீதி, 3ஆம் குறுக்கு கொங்றிட் இடல். | 1.5 |
| 10 | | கல்லடி, வேலூர் முதலாம் இரண்டாம் இணைப்பு வீதிகள் | 2.0 |

| | | | |
|---|---|---|---|
| 11 | | கல்லடி மாரியம்மன் கோயில் 3ஆம் குறுக்கு வீதி கொங்றிட் இடல். | 1.5 |
| 12 | | இசை நடனக் கல்லூரி 1ம் குறுக்கு கொங்றிட் இடல். | 1.0 |
| 13 | | புளியந்தீவு, ஈஸ்வரன் வீதி, கொங்றிட் இடல். | 1.5 |
| 14 | | வீச்சுக் கல்முனை, 3ஆம் குறுக்கு வீதி, கொங்றிட் இடல். | 1.5 |
| 01 | கௌரவ.சீ.யோகேஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினர். | அமிர்தகழி, ஆனந்தன் வீதி தார் இடல் | 2.0 |
| 02 | | கொக்குவில், 2ஆம் குறுக்கு வீதி தார் இடல் | 2.0 |
| 03 | | பெரிய ஊறணி 4ஆம் குறுக்கு கொங்றிட் இடல் | 2.0 |
| 04 | | கருவேப்பங்கேணி, அம்றுஸ் வீதி, கொங்றிட் இடல் | 2.0 |
| 05 | | மாமாங்கம், 1ஆம் 3ஆம் இணைப்பு வீதிகள் | 2.0 |
| 06 | | தாமரைக்கேணி, பார் வீதி குறுக்கு ஒழுங்கை கொங்றிட் இடல். | 2.0 |
| 07 | | சின்ன உப்போடை, பார் வீதி 3ஆம் ஒழுங்கை கொங்றிட் இடல். | 2.0 |
| 08 | | கல்லடி மாரியம்மன் கோயில் 3ஆம் குறுக்கு வீதி மிகுதி வேலை கொங்றிட் இடல். | 2.0 |
| 09 | | புதுநகர், 5ஆம் குறுக்கு கொங்றிட் இடல். | 2.0 |
| 01 | கௌரவ.அலிசாஹிர் மௌலானா இராஜாங்க அமைச்சர். | பூநொச்சிமுனை, ஹிஜுறியா ஜீம்மா பள்ளிவாயல் 4ஆம் குறுக்கு வீதி, கொங்றிட் இடல். | 1.5 |

மத்தியரசின் நிதிக் கட்டுப்பாடுகள் முழுமையாக உள்ளூராட்சி மன்றமொன்றிற்கு வழங்க ஏற்பாடுகள் முடியாத நிலை எழுந்த போது குறித்த வீதிகளை மேற்கொள்ள மாநகர சபைக்கு பக்கபலமாக பல சனசமுக நிலையங்கள் முன் வந்தன . இதன்படி சனசமுக நிலையங்களின் சார்பாக மாநகர சபையே மேற்படி வீதிகளை மேற்கொண்டு வருகின்றது.





மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் ஒப்பந்த அடிப்படையிலும் சில வீதிகள் நேரடியாக சமூக மட்ட அமைப்புகளுக்கு வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| இல | ஒதுக்கீடு செய்தவர் | வீதியின் பெயர் | ஒதுக்கீடு (மில்லியன்) |
|---|---|---|---|
| 01 | கௌரவ.ஞா.ஸ்ரீநேசன் பாராளுமன்ற உறுப்பினர். | பணிச்சையடி, 'K' வலய வீதி கொங்றிட் இடல் | 1.5 |
| 02 | | இருதயபுரம் 10 ஆம் குறுக்கு வீதி கொங்றிட் இடல் | 1.5 |
| 03 | | ஞானசூரியம் சதுக்கம், நாகதம்பிரான் கோயில் உள்ளக வீதி கொங்றிட் இடல் | 1.5 |
| 04 | | திருச்செந்தூர், 2ஆம் குறுக்கு, கொங்றிட் இடல் | 1.5 |
| 05 | | சின்ன உப்போடை, சிவா ஒழுங்கை கொங்றிட் இடல் | 1.5 |
| 06 | | திருப்பெருந்துறை, 12ஆம் குறுக்கு கொங்றிட் இடல் | 2.0 |
| 01 | கௌரவ.சீ.யோகேஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினர். | பாரதி புரம், பாரதி ஒழுங்கை கொங்றிட் இடல் | 2.0 |
| 02 | | நாவலடி, புதுமுகத்துவாரம், 2ஆம் குறுக்கு, கொங்றிட் இடல் | 2.0 |
| 03 | | கல்லடி, முகத்துவாரம், 2ஆம் குறுக்கு கொங்றிட் இடல் | 2.0 |
| 04 | | திருச்செந்தூர், 2ஆம் குறுக்கு, கொங்றிட் இடல் | 2.0 |
| 05 | | திருப்பெருந்துறை, 11ஆம் குறுக்கு கொங்றிட் இடல் | 2.0 |
| 01 | கௌரவ.அலிசாஹிர் மௌலானா இராஜாங்க அமைச்சர். | மஞ்சந்தொடுவாய், சம்சுதீன் ஒழுங்கை முதலாம் குறுக்கு கொங்றிட் இடல். | 1.0 |
| 02 | | மஞ்சந்தொடுவாய், அப்துர் றஃமான் 2ஆம் குறுக்கு கொங்றிட் இடல். | 1.0 |
| 03 | | பூநொச்சிமுனை, ஹிலுறியா ஜீம்மா பள்ளிவாயல் 3ஆம் குறுக்கு வீதி, கொங்றிட் இடல். | 1.5 |
| 04 | | மஞ்சந்தொடுவாய், குசைனியா முதலாம் குறுக்கு கொங்றிட் இடல். | 0.5 |





## புகையிரத நிலைய ஒழுங்கையினை விரிவாக்கல்

மட்டக்களப்பு மாநகரின் நிலையான அபிவிருத்தியினைக் கருத்தில் கொண்டு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் அவர்களின் 1000 நாள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நகரின் மத்தியில் நிலவும் சனநெரிசலை கட்டுப்படுத்தவும், கால விரயத்தினைக் குறைக்கும் நோக்கோடும் 3 கிலோ மீற்றர் நீளமும் 15 மீற்றர் அகலமும் கொண்ட ஓர் மாற்றுப் பாதையொன்றினை அமைப்பதற்கான முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.




மூன்று கட்டமாக மேற்கொள்ளப்படவுள்ள மேற்படி வீதி அபிவிருத்திப் பணிகளில் முதற்கட்டமாக போக்குவரத்துக்கு இடைஞ்சலான முறையில் மிகக் குறுகிய ஒழுங்கையாக காணப்பட்ட புகையிரத ஒழுங்கையானது 15 மீற்றர்கள் அகலம் கொண்ட வீதியாக விஸ்தரிக்கப்படவுள்ளது.

மொத்தமாக 20 மில்லியன்கள் செலவு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள குறித்த அபிவிருத்தி பணிகளின் முதற்கட்ட பணிகளுக்காக 7மில்லியன்கள் வரை ஒதுக்கப்பட்டுள்ளன.




2009ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து இலகினைக் கருத்தில் கொண்டு ஒழுங்கைக்கான காணியை புகையிரத திணைக்களத்தின் அப்போதைய பொதுமுகாமையாளராகவிருந்த ருவான் குணருவன வழங்கியதோடு மக்கள் பயன்பாட்டுக்காக திறந்தும் வைத்தார்.

பெரும்பாலும் பாடசாலை மாணவர்களின் பயன்பாட்டிலிருந்து வந்த மேற்படி ஒழுங்கையானது தற்காலத்தில் பெரும்பாலான மக்களின் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. இதனால் போக்குவரத்து நெருசல் ஏற்படுவதோடு பல சமூக சீர்கேடுகள் பதிவாகும் இடமாகவும் அமைந்திருந்தது. குறிப்பாக தனியாக வரும் பெண் பிள்ளைகள் பாலியல் தீண்டல்களுக்கு உள்ளாவதுடன் திருட்டு சம்பவங்கள் பல இடம்பெறுவது தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ்வாறான பிரச்சனைகள் தொடர்பில் மாநகர முதல்வர் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் முறைப்பாடுகள் செய்யபட்டதோடு, நகரின் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கான மாற்றுப் பாதையாக இதனை உருவாக்கும் திட்ட மொன்மொழிவும் கௌரவ முதல்வரால் முன்வைக்கப்பட்டது.



இதனைத் தொடர்ந்து இவ் ஒழுங்கையினை விஸ்தரிப்பு செய்வதற்காக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜீண ரணதுங்கவுடன் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் துணையுடன் மாநகர முதல்வர் மேற்கொண்ட கலந்துரையாடலை அடுத்து கிடைக்கப்பெற்ற வழிகாட்டலில் புகையிரத திணைக்களத்தின் பொது முகாமையாளர் உள்ளிட்ட பிராந்திய பொறியியலாளர்கள் மற்றும் மட்டக்களப்பு புகையிரத நிலைய அதிபர் ஆகியோரின் அனுமதியுடன் குறித்த ஒழுங்கையினை விரிவாக்கம் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான 3 மில்லியன் ரூபாய் நிதியினை கம்பெரலிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக பாராளமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன அவர்கள் ஒதுக்கியிருந்ததோடு மிகுதி வேலைகள் மாநகர சபையினதும், வீதி அபிவிருத்தி அதிகார சபையினதும் பங்களிப்புகளுடன் இன்னும் சில வாரங்களில் நிறைவுறுத்தப்படவுள்ளன.



முழுமையாக 2021 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தும் இலக்கோடு ஆரம்பிக்கப்பட்டுள்ள குறித்த வேலைகள் முழுமை பெற்றதும் இப்பாதையால் மட்டக்களப்பு நகரில் போக்குவரத்து நெரிசலையும், வீணான கால தாமதங்களையும் குறைக்க முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.



## 02. வீதி மின் விளக்குகள்

மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் பல வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தப்படாமையால் இருளடைந்து காணப்பட்டன.



அத்துடன் குற்றச் செயல்களும் அதிகரித்துக் காணப்பட்டதோடு, பெண்கள் சிறுவர்கள் இரவில் நடமாட முடியாத நிலையும் காணப்படுவதாக பொது மக்கள் பலர் முறைப்பாடுகளை வட்டார உறுப்பினர்கள் ஊடாகவும், நேரடியாகவும் மாநகர முதல்வருக்குத் தெரிவித்திருந்தனர்.

இதற்கமைய ஆட்சிப் பொறுப்பை கையேற்ற முதல் மாதத்திலேயே துரிதமாக வீதி மின் விளக்குகளைப் பொருத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தோம். தற்போது வரை 85%க்கும் மேலான வீதி மின் விளக்குகள் போடப்பட்டுள்ளன.

மின் குமிழ்களைப் பொருத்துவதற்காக இதுவரை மாநகர சபையினால் 20 மில்லியன் ரூபாய்கள் வரை செலவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டாரங்களிலும் செலவு செய்யப்பட்டுள்ள செலவு விபரங்கள் பின்வருமாறு.

| வட்டாரம் | மின் விளக்குகளின் எண்ணிக்கை | | வட்டாரம் | மின் விளக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 ஆம் வட்டாரம் | 153 | | 11 ஆம் வட்டாரம் | 136 |
| 02 ஆம் வட்டாரம் | 324 | | 12 ஆம் வட்டாரம் | 231 |
| 03 ஆம் வட்டாரம் | 237 | | 13 ஆம் வட்டாரம் | 216 |
| 04 ஆம் வட்டாரம் | 250 | | 14 ஆம் வட்டாரம் | 163 |
| 05 ஆம் வட்டாரம் | 197 | | 15 ஆம் வட்டாரம் | 182 |
| 06 ஆம் வட்டாரம் | 102 | | 16 ஆம் வட்டாரம் | 91 |
| 07 ஆம் வட்டாரம் | 117 | | 17 ஆம் வட்டாரம் | 193 |
| 08 ஆம் வட்டாரம் | 147 | | 18 ஆம் வட்டாரம் | 138 |
| 09 ஆம் வட்டாரம் | 127 | | 19 ஆம் வட்டாரம் | 149 |
| 10 ஆம் வட்டாரம் | 139 | | 20 ஆம் வட்டாரம் | 177 |



## 03. வீதி விபத்துக்களை கட்டுப்படுத்தல்



மட்டக்களப்பு மாநகர சபைக்குட்டபட்ட நாவற்குடா, கத்தாவடிப்பிள்ளையார் கோவிலடிக்கு முன்பாக உள்ள திருப்பம், பாதுகாப்பற்றதாக காணப்படுவதாக குறித்த பிரதேசத்தின் சமூக அமைப்புகள் மாநகர சபைக்கு அறிவித்திருந்த நிலையில், **BMC/ GM-07(09)/2018- 15** இலக்க மாநகர சபையின் தீர்மானத்தின் ஊடாக மாநகர முதல்வர் தி. சரவணபவன் அவர்களின் பணிப்புரைக்கு அமைய வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சசினந்தன் அவர்களின் துரித நடவடிக்கையால் குறித்த திருப்பம் அடைக்கப்பட்டு அதற்கு 25 மீற்றர்களுக்கு அப்பால் பாதுகாப்பான இடத்தில் வேறு ஒரு திருப்பம் அமைக்கப்பட்டது.



மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் இரு புறங்களிலிருந்தும் வரும் வாகனங்களை கிளை வீதியின் ஊடாக கடக்கும் வாகனங்களால் பார்க்க முடியாதவாறு கடைகளும் மரங்களும் காணப்படுகின்றன. இதனால் அண்மைக்காலமாக பல உயிரிழப்புகள் கூட நேர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 04. புதிய வீதி சமிஞ்ஞை விளக்கு

மட்டக்களப்பு மாநகருக்குள் அதிகரித்துவரும் வீதி விபத்துக்களை குறைக்கும் நோக்கில், 11 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக மட்டக்களப்பு திருகோணமலை பிரதான வீதியையும், புகையிரத நிலைய வீதியையும், அருணகிரி வீதியையும் இணைக்கும் சந்தியில் சமிஞ்சை விளக்கினை உடனடியாக நிறுவுவதற்கான பணிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் த.பத்மராஜா அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.





இச்சந்தியானது அதிகமான வீதி விபத்துக்கள் சம்பவிக்கும் இடமாக காணப்படுன்றமை தொடர்பில் போக்குவரத்து பொலிஸாருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் விளைவாக இவ்விடத்தில் வீதி சமிஞ்சை விளக்கினை உடனடியாக நிறுவ வேண்டும் என மாநகர முதல்வரால் திட்ட மொன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

அதுமட்டுமன்றி மேற்படி சமிஞ்சை விளக்கினை நிறுவ வேண்டுமாயின் அது அமையவுள்ள இடத்தில் உள்ள அருணகிரி ஒழுங்கையானது சற்று அகலமாக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது.



இதற்காக கௌரவ மாநகர முதல்வர் அவ் ஒழுங்கையில் வசிப்பவர்களுடன் கலந்துரையாடியதன் விளைவாக குறித்த குடியிருப்பாளர்கள் தாமாகவே தமது சுற்று மதில்களை உடைக்க முன்வந்தனர். இதற்கமைய உடைக்கப்பட்ட மதில்களுக்குப் பதிலாக புதிதாக மதில்களைக் கட்டிக்கொடுக்கவும் முடிந்துள்ளது.

மேலும் 5 இடங்களில் இது போன்ற வீதி சமிஞ்சை விளக்குகளை நிறுவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டும் வருகின்ற அதேவேளை, கிழக்கு மாகாணத்தின் முதலாவது வீதி சமிஞ்சை விளக்காகவும் இது பதியப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## 05. புதூர் சந்தியில் ஓர் பேரூந்துத் தரிப்பிடம்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு என படுவான்கரைப் பகுதியிலிருந்து வந்து செல்லும் மக்கள் பேரூந்திற்காக பல மணி நேரங்கள் மரங்களுக்கு கீழ் நின்றபடி மழை,



வெயில் காலங்கள் என காத்திருக்க வேண்டி நிலை காணப்பட்டது.

இவர்களில் அதிகமானோர் கர்ப்பிணி தாய்மார்களும், வயோதிபர்களும் உள்ளடங்குகின்றனர். எனவே இவர்களின் நன்மை கருதி மாநகர சபையின் சொந்த நிதி மூலமாக புதூர் சந்தியில் ஒரு பேரூந்துத் தரிப்பிடம் (Bus Halt) அமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது.

## 06. மட்டக்களப்பு நகரை அழகுபடுத்தும் செயற்பாடுகள்.



மட்டக்களப்பினை அழகுபடுத்தும் நோக்கோடு கடைகளுக்கு முன்னாலும் தெரு ஓரங்களிலும், நடைபாதைகளிலும் காணப்பட்ட விற்பனைப் பொருட்கள், காட்சிப் பொருட்கள் அனைத்தும் உரிய வியாபார நிலையங்களுக்குள் கொண்டு செல்லப்பட்டு தற்போது நடைபாதைகள் அனைத்தும் மக்களது வழமையான பயன்பாட்டிற்கு திரும்பியுள்ளன.



இது குறித்த கலந்துரையாடலானது மாநகர முதல்வரின் தலைமையில் 15.10.2018 அன்று இடம்பெற்றது. இதில் மாநகரில் வியாபாரம் செய்யும் வர்த்தக சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ஓர் காலஎல்லையொன்றினையும் நிர்ணயித்து அந்தக்கால எல்லைக்குள் வீதியோரங்களில் மாநகரசபையின் சட்டவிதிகளுக்கு முரணான வகையில் அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள், வடிகான்களின் மேலான படிக்கட்டுகள்என்பவற்றினையும் அகற்றித்தர வேண்டும் எனவும் வர்த்தக சங்கத்தினரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டன.



## 07. வாவிக்கரை பூங்கா



நகரை அழகுபடுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் வாவிக்கரை வீதியில் சுமார் 42 மில்லியன் செலவில் ஓர் பூங்கா அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கான நிதி உதவிகளை நகர அபிவிருத்தி அதிகார சபையானது ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்தப் பூங்காவிற்கான அடிக்கல் நாட்டப்பட்டு தற்போது இதன் பூர்வாங்க வேலைகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. இது எதிர்வரும் வைகாசி மாதமளவில் நிறைவுறும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இதன் ஊடாக எமது மட்டக்களப்பு வாவியோடு சேர்ந்த சூழல் மேலும் மெருகூட்டப்படுவதோடு சிறுவர்களும் உள ரீதியாக வலுவடைவதோடு, அவர்களின் ஆளுமையும் விருத்தியடையும் வாய்ப்புகளும் உள்ளன.

## 08. பசுமை மாநகரினை உருவாக்கும் செயற்றிட்டம்.

மட்டக்களப்பு மாநகரசபையின் பசுமை நகரை உருவாக்கும் வேலைத் திட்டத்தின் ஓர் செயற்பாடாக மட்டக்களப்பு - திருகோணமலை பிரதான வீதியின் மத்தியில் அலங்கார மரங்களை நடும் வேலைத்திட்டமானது 01.12.2018 அன்று மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் இடம்பெற்றது.



யுனிசெப் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இடம்பெற்றுவரும் இத்திட்டத்தினை மாநகர ஆணையாளர் கா.சித்திரவேல், பிரதி ஆணையாளர் நா.தனஞ்ஜெயன், மாநகரசபை உறுப்பினர்களான ரூபராஜ், அசோக் ஆகியோருடன் யுனிசெப் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், மாநகர சபையின் ஊழியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மரங்களை நட்டு வைத்தனர்.

### ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் ஊடாக கிடைக்கப்பெற்ற மரக்கன்றுகள்



பசுமையான மாநகரத்தினை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு வருடத்தின் முதல் நாளான இன்று (2019.01.01) மட்டக்களப்பு மாநகர சபையினால் பயன்தகு மரக் கன்றுகள் நடப்பட்டன.

ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் ஊடாக கிடைக்கப் பெற்ற மேற்படி மரக் கன்றுகளை மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் அவர்கள் மாநகர முதல்வர் தி.சரவணபவன் அவர்களிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார், மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் சி.பிரகாஸ் மற்றும் மாநகர சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மரங்களை நட்டு வைத்தனர்.

## 09. மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித் திட்டங்கள்



மட்டக்களப்பு மாநகர சபையானது பல மனிதநேயச் செயற்பாடுகளிலும் கவனம் செலுத்தி வருகின்றது. இதன் ஓர் அம்சமாக தைத்திருநாளை முன்னிட்டு மாவட்ட சமூக சேவைத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட 165 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா 2500 ரூபாய் வரை பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மாநகர நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாற்றுத்திறனாளிகளுக்கே இவ்வாறு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாகாண சபைகள் மற்றும், உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளர் நஜிமுதீன், உள்ளூராட்சி ஆணையாளர் நா.மணிவண்ணன், மாநகர பிரதி முதல்வர் க.சத்திசீலன், மாநகர ஆணையாளர் கா.சித்திரவேல், பிரதி ஆணையாளர் நா.தனஞ்ஜெயன், சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர் பா.ராஜ்மோகன் மற்றும் மாநகர சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.





## 10. கௌரவ முதல்வரின் வேண்டுகோளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

மாநகர சபையின் நிதியானது மட்டுப்படுத்தப்பட்ட செலவுகளுக்கு மாத்திரமே பயன்படுத்த முடியும் எனும் கடப்பாடு உள்ளது. இருந்தும் மாநகர சபைக்குள் தேவைகளும், குறைபாடுகளும் அதிகமாகவே உள்ளன. குறிப்பாக பல வீதிகள் செப்பனிடப்படாமலும், வடிகான்கள் புனரமைக்கப்படாமலும் காணப்படுகின்றன.

எனவே இவற்றை உடனடியாக நிவர்த்தி செய்யும் நோக்கோடு கௌரவ மாநகர முதல்வர் வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றிற்கு விடுத்த வேண்டுகோளிற்கிணங்க கிட்டத்தட்ட 350 மில்லியன்களுக்கும் மேற்பட்ட வேலைகள் மாநகர எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

### 1. கார்ப்பெட் வீதிகள்

துரிதமாக மேற்கொள்ள வேண்டியிருந்த மாமாங்கம் கோயில் வீதி உள்ளிட்ட 03 வீதிகள் கார்ப்பெட் வீதிகளாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அபிவிருத்தி செய்யப்பட்டன.




### 2. கல்லடி பாலத்திற்கு அருகாமையில் ஒரு வாய்க்கான்



கல்லடியை அண்மித்த பிரதேசங்களில் ஏற்படும் பாரிய வெள்ள அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் விடுத்த வேண்டுகோளிற்கிணங்க கல்லடி பாலத்திற்கு அருகாமையில் ஒரு வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அமைச்சானது இப்பணிகளுக்காக கிட்டத்தட்ட 8 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கியுள்ளது. இதன் ஊடாக கல்லடி முகத்துவாரம், நாவற்குடா, வேலூர், நொச்சிமுனை ஆகிய பிரதேசங்களில் தேங்கி நிற்கும் வெள்ள நீரை விரைவாக வெளியேற்றி பாரிய அனர்த்தங்கள் ஏற்படாமல் தடுக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.



# 11. திரவக் கழிவு சேகரிப்பு நிலையத்திற்கான சுற்று மதில்




மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் சேகரிப்படும் திரவக் கழிவுகளை திருப்பெருந்துறை பிரதேசத்தில் உள்ள மாநகர சபைக்குச் சொந்தமான காணிக்குள் வைத்து அதற்கான இரசாயனப் பதார்த்தங்களை இட்டு தொற்று நீக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.



அவ்விடமானது சுற்றுமதில் இல்லாமையால் பாதுகாப்பற்ற நிலை காணப்பட்டுவதாக அங்கு பணிபுரியும் மாநகர சபையின் ஊழியர்களும், அப்பிரதேச மக்களும் கௌரவ முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தனர்.



இதற்கமைய நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதி பங்களிப்புடன் மேற்படி திரவக் கழிவு சேகரிப்பு நிலையத்திற்கு 300 மீற்றர் நீளமான சுற்று மதில் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.



## 12. “உயிர் வாயு கலன்”



மட்டக்களப்பு மாநகர சபையினது, UNDP நிகழ்ச்சித்திட்டத்தின் துணையுடன் “உயிர் வாயு கலன்” அமைப்பதற்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றது. மாநகர பொதுச்சந்தைத் தொகுதிக்குள் கிட்டத்தட்ட 1, 778, 000.00 ரூபாய் நிதியில் இத் திட்டமானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கழிவுப்பொருட்களை காற்றில்லாச் சூழ்நிலையில் நொதிக்கச் செய்வதன் ஊடாக அசிட்டிக் அமிலம், புரோபியனிக் அமிலம், மற்றும் பிட்யூட்ரிக் அமிலம் என்ற இரசாயனங்கள் உருவாகின்றன. இந்த மூன்று அமிலங்களும் கடைசியில் மீத்தேன் என்ற வாயுவாக மாறி விடுகின்றன. இந்த மீத்தேன் வாயு நன்றாக எரியும் தன்மை கொண்டது. இந்த வாயு மற்ற எரிவாயுக்களை விட மிகவும் வெப்பத்துடன் எரியும் தன்மை கொண்டது என்பதால் சமையல் உட்பட அனைத்து எரிக்கும் தேவைகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.



இதே செயன்முறையின் கீழ் மட்டக்களப்பு மாநகர பொதுச்சந்தைக்குள் சேகரிக்கப்படும் கழிவுகளை ஒரு இடத்தில் சேர்த்து அதிலிருந்து மீத்தேன் வாயுவை பெறுவதற்கான “உயிர் வாயு” கலன் அமைப்புக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு 17.08.2018 அன்று மட்டக்களப்பு பொதுச் சந்தை வளாகத்திற்குள் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாநகர முதல்வர், மாநகர ஆணையாளர், பிரதி ஆணையாளர், பிரதி முதல்வர் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இத்திட்டத்தின் ஊடாக பெறப்படும் எரிவாயுவை முதற்கட்டமாக கொள்வனவு செய்ய மட்டக்களப்பு பொலிஸ் விடுதி சமுகம் முன்வந்துள்ளது.

அத்துடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) ஊடாக பெறப்பட்ட நிதி உதவியுடன் மூலம் மேற்படி உயிர் வாயு கலன் (Bio Gass Plant) நிறுவப்பட்டுள்ளமையும் குறிப்படத்தக்கது.





## 13. புதிய வாகனங்கள் கொள்வனவு




மாநகரின் திண்மக் கழிவகற்றல் சேவையினை மேம்படுத்தும் நோக்கிலும், துரித கழிவகற்றல் செயற்பாடுகளின் ஊடாக சுத்தமான நகரை உருவாக்கும் நோக்கிலுமாக மட்டக்களப்பு மாநகர சபையால் புதிய கொம்பக்டர் வாகனங்கள் இரண்டும், எஸ்கவேட்டர் இயந்திரம் ஒன்றும், இழுவைப் பெட்டியுடன் கூடிய நான்கு உளவு இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாநகரத்திற்குள் வதியும் மக்களின் வரிப்பணத்தின் ஊடாக, மாநகர சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற மக்களுக்கான சுகாதார சேவையை மேலும் வினைத் திறனாகவும், விளைதிறனாகவும் மேற்கொள்ள ஏதுவாக கிட்டத்தட்ட 28 மில்லியன் ரூபாய்கள் செலவில் இவ்வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.




கொள்வனவு செய்யப்பட்ட குறித்த வாகனங்களை மாநகர சபையின் சுகாதார மற்றும் வேலைகள் குழு தலைவர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்வில் மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகர ஆணையாளர் கா.சித்திரவேல், மாநகர சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



அத்துடன் திண்மக் கழிவகற்றல் சேவையினை மேம்படுத்தும் நோக்கிலும், துரித கழிவகற்றல் செயற்பாடுகளின் ஊடாக சுத்தமான மாநகரை உருவாக்கும் நோக்கிலுமாக மட்டக்களப்பு மாநகர முதல்வரின் வேண்டுகோளிற்கிணங்க




மாகாணசபைகள், உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் விடுத்திருந்த வேண்டுகோளிற்கிணங்க கிடைக்கப்பெற்ற புதிய கொம்பக்டர் வாகனம், மற்றும் மாநகருக்குள் வதியும் மக்களின் வரிப்பணத்தின் ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட எஸ்கவேட்டர் இயந்திரமும் மாநகர முதல்வரால் அந்தந்த பிரிவுகளுக்கு என குறித்த பிரிவுத் தலைவர்களிடம் கையளிக்கப்பட்டன.

## 14. விஷேட படையணி



அவசர தேவை ஏற்படும் போது அமுல்படுத்துவதற்காக ஒரு விசேட படையணி உருவாக்கப்பட்டுள்ளது. எங்கெல்லாம் கழிவகற்றல் செயற்பாட்டில் தொய்வு நிலை மற்றும் பிரச்சனைகள் ஏற்படுகின்றனவோ அங்கெல்லாம் இந்த படையணியினர் உடனடியாக செயற்பட்டு பிரச்சனைகளை தீர்ப்பதோடு மாநகரின் தூய்மையினையும் பேணி வருகின்றார்கள்.

மக்களினால் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் மற்றும் துரித அபிவிருத்தி பணிகளை இதுவரை காலமும் இவர்களின் உதவியுடன் சிறப்பாக மேற்கொள்ள முடிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



## 15. ஜெய்க்கா நிறுவன தொண்டர்களின் பணி



எமது கழிவகற்றல் தொடர்பாக விழிப்புணர்வுகளை மேற்கொள்வதற்காக ஜப்பான் நாட்டிலிருந்து ஜெய்க்கா நிறுவன தொண்டர்களை நாம் மாநகர சபைக்குள் உள்வாங்கியுள்ளோம், இவர்கள் எங்களது மாநகர எல்லைக்குள் உள்ள பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்களுக்கான விழிப்புணர்வு செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்கள்.

அத்துடன் பொதுமக்களினது முறையற்ற கழிவகற்றல் செயற்பாடுகளின் காரணமாக, மட்டக்களப்பு மாநகரைச் சூழவுள்ள நீர் நிலைகள் துரிதமாக மாசடைந்து வருவதனைக் கருத்திற் கொண்டு கடற்கரைச் சுத்தம் செய்தல் (Beach cleaning campaign), வாவிகளைச் சுத்தம் செய்தல் (Lagoon cleaning campaign) என்பன உட்பட 08 இற்கும் மேற்பட்ட சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

உக்காத பிளாஸ்டிக் பொருட்களையும், பொலித்தின் பைகளையும், மதுபானக் குவளைகளையும் வாவிகளினுள் வீசுவதனால் நீர் நிலைகள் மாசடைவதோடு அதனை அண்டி வாழும் மக்கள் பெரும் சுகாதாரச் சீர் கேடுகளுக்கும் முகங்கோடுக்க நேரிட்டுள்ளது.

அத்துடன் நீர் வாழ் உயிரினங்களும், கண்டல் தாவரங்களும் அழிந்து வரும் நிலையும் உருவாகியுள்ளது. இதன் காரணமாக மாநகரின் தூய்மையினையும், நகரின் அழகையும் பேணும் வகையில் இந்த ஜெய்க்கா தொண்டர்கள் அயராது பணியாற்றி வருகின்றனர்.

## 16. நகரை முழுமையான CCTV கண்காணிப்பில் கொண்டுவரல்

மட்டக்களப்பு நகரமானது மிகவும் சன நெரிசல் மிகுந்த நகரமாக மாறிவருகின்றமையால் பல குற்றச் செயல்களும் இடம்பெற்ற வண்ணம் உள்ளன. அத்தோடு, முறையற்ற கழிவகற்றல் முகாமைத்துவங்களும் சில வர்த்தக நிலையங்களின் முன்னால் குப்பைகளை வீசி விட்டுச் செல்வதும் தொடர்ந்த வண்ணமுள்ளன.

இவற்றை தடுத்து நகரை முழுமையான கட்டுப்பாட்டில் பேணும் வகையில் முழுமையான CCTV கண்காணிப்பில் கொண்டுவர மாநகர முதல்வர் தீர்மானித்தார். இதற்கேற்ப நிதி வளத்தினையும், நிறுவுதலுக்கான முழு உதவிகளையும் சில வர்த்தகர்கள் தாமாகவே முன்வந்து உதவியிருந்தனர்.




அந்தவகையில் தற்போது முதற்கட்டமாக மட்டக்களப்பு நகரமானது முழுமையான CCTV கண்காணிப்பில் வந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக மாநகரம் முழுவதும் இக் கமரா கண்காணிப்பை விஸ்தரிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



## 17. இயற்கை நீரோட்ட தோணாக்களை புனரமைத்தல்

மட்டக்களப்பு மாவட்டமானது ஒவ்வொரு வருடமும் வெள்ள அபாயங்களை எதிர்நோக்கும் மாவட்டமாக பதிவாகிக் கொண்டே வருகின்றது. இதற்கு மிக முக்கியமான காரணம் வடிகான்கள் இல்லாமையும், அவ் வடிகான்களை பொது மக்கள் சட்ட விரோதமான முறையில் அடைத்து வைத்திருந்தமையுமே காரணமாகும்.



இவ்வாறு 25 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் இருந்தே கைவிடப்பட்ட வாய்க்கால்கள் தற்பொழுது மீளவும் வாய்க்கால்களாக மாற்றப்பட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை மாநகர எல்லைக்குள் தனியாரால் சட்டவிரோதமான முறையில் அடாத்தாக பிடித்து அடைத்து வைத்து உரிமை கோரப்பட்டு வந்த வழமையான இயற்கை நீரோட்டத்திற்கான வடிகான்கள் மற்றும் தோணாக்களை கையகப்படுத்தும் நடவடிக்கைகளையும் மட்டக்களப்பு மாநகர சபையானது முன்னெடுத்து வருகின்றது.

கடந்த பல வருடங்களாக மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் நீர் வடிந்தோடுவதற்காக அமைக்கப்பட்டிருந்த பாரிய வடிகான்களையும், இயற்கை நீர் ஓட்டத்திற்கான தோணாக்களையும் தனியார் சிலர் அடாத்தாகப் பிடித்து மண் நிரப்பி வேலியடைத்து உரிமை கோரி வந்திருந்தனர். இதனால் மழை காலங்களில் ஏற்படுகின்ற வெள்ள நீர் வடிந்தோடுவதற்கான வழிப்பாடுகள் அடைக்கப்பட்டிருந்தமையால் மழை நீர் தேங்கி பாரிய வெள்ள அனர்த்தத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் முகங்கொடுத்தும் வந்தனர்.

இதனடிப்படையில் இவ்வாறான சட்ட விரோதமாக செயற்பாட்டில் ஈடுபட்டவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களால் மழை நீர் வடிந்தோடும் குறிப்பிட்ட வடிகான்களிலும் தோணாக்களிலும் ஏற்படுத்தப்பட்டிருந்த தடைகளை அகற்றி அவற்றை நீரோட்ட செயற்பாட்டிற்காக மாநகர சபையிடம் ஒப்படைக்குமாறு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டதுடன், துண்டுப் பிரசும் மூலம் இறுதி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டு வந்த நிலையில் அதற்கான முன்னேற்ற செயற்பாடுகள் ஏதும் காணப்படாததால் மாநகர சபையானது மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஆணையாளரின் அதிகாரத்தினைப் பிரயோகித்து சுமார் 1700 மீற்றர் நீளமான வடிகான்களையும் கையகப்படுத்தி அவற்றை புனர்நிர்மானம் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

## 18. நான்கு பேர்ச்சஸ் காணியில் கட்டிடங்களை அமைப்பதற்கான தீர்மானம்

நகருக்குள் இடப்பற்றாக்குறைகள் அதிகரித்து வருவதால் தம்மிடமுள்ள காணிகளின் விஸ்தீரணத்துக்குள் கட்டிடங்களை அமைக்க முடியாமல் தாம் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக பொதுமக்கள் பலர் கௌரவ முதல்வருக்கும், மாநகர சபைக்கும் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.



இதற்கு இணங்கவும், தற்காலத்தின் சனநெரிசல், பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் மக்களின் பொருளாதார, சமூக நலனைக் கருத்திற்கொண்டும் கட்டிடம் கட்டுவதற்காக அனுமதிக்கப்படும் ஆகக்குறைந்த 6 பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்ட காணி இருக்க வேண்டும் என்ற ஏற்பாட்டினைத் திருத்தி ஆகக்குறைந்தது 4 பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்ட காணியாக இருக்க வேண்டும் என மாற்றியமைப்பதற்காக கௌரவ முதல்வர் அவர்களால் முன்மொழியப்பட்ட பிரேரணையானது கடந்த ஒக்டோபர் மாதம் 04 ஆம் திகதி இடம்பெற்ற மாநகர சபையின் 9ஆவது அமர்வில் கௌரவ உறுப்பினர்களின் ஏகமனதான விருப்பத்துடன் தீர்மானமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதற்கான வர்த்தமாணி வெளியிடப்பட்டதும், 2019ஆம் ஆண்டு முதல் மாநகர எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 19. மட்டக்களப்பு மாநகரசபை பதில் சிற்றூழியர்கள் நியமனம்.



எமது மாநகர சபையின் பணிகளை செவ்வனே ஆற்றுவதில் ஊழியர்களின் பலமானது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. அந்தவகையில் எமது மாநகரை தொடர்ந்தும் சுத்தமான மாநகரமாக பேணுவதற்கும், எமது மாநகரின் துரித அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கும், பசுமைச் சுத்தமான நகரமாக கட்டியெழுப்புவதன் ஊடாக முதற்தர நகரமாக மிளிர வைப்பதற்கும் ஆளணிப் பற்றாக்குறையானது பெருங்குறையாகக் காணப்பட்டது.

இதனை மாநகர சபையின் 04 ஆவது பொது அமர்வில் முன்மொழிந்து அதற்கான அனுமதி பெறப்பட்டது. இதன்பால் மட்டக்களப்பு மாநகர சபையில் இதுவரையில் வெற்றிடமாகக் காணப்பட்ட பதில் சிற்றூழியர்களுக்கான நியமனங்கள் வழங்கும் முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மாநகர சபையில் தொழில் வேண்டி விண்ணப்பித்த 450 இற்கும் அதிகமான விண்ணப்பதாரர்களிடையே நடைபெற்ற நேர்முகத் தேர்வுகளின் அடைப்படையில் முதற்கட்டமாக 30 பேருக்கு இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.



இந்நியமனங்களை 06.09.2018 அன்று கௌரவ மாநகர முதல்வருடன் கௌரவ பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகர செயலாளர் சியாஹீல் ஹக், நிர்வாக உத்தியோகத்தர் ரோகினி விக்னேஸ்வரன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து வழங்கி வைத்தனர்.

## 20. மாநகர தையல் பயிற்சி நிலையத்தினை மேம்படுத்தல்

தொழில் வாய்ப்புகள் இன்றியும் தொழில் வழிகாட்டல்கள் இன்றியும் நிர்க்கதியாகி நிற்கும் எமது இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கோடு மாநகர சபைக்குரிய வியாபார மையக் (Global) கட்டிடத்தில் தையல் பயிற்சி நிலையம் ஒன்று நடாத்தப்பட்டு வருகின்றது. இங்கு 32 மாணவியர்கள் வரை பயின்று வருகின்றார்கள்.

இந்தக் கட்டிடமானது மிக மோசமாக பழுதடைந்துள்ளதனால் மழை காலங்களில் பாரிய ஒழுக்கு ஏற்படுவதுடன், அங்கு பயிற்சி பெற்றுவரும் மாணவர்களுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய வகையிலும் அமைந்துள்ளது. உடனடியாக இதனைத் திருத்துவதற்கு கௌரவ முதல்வரால் பணிக்கப்பட்டதுடன் இப்பயற்சி நெறிகளை இடைநிறுத்தாது மாற்றீடாக மாநகர பொதுச் சந்தையின் புதிய கட்டிடத் தொகுதியின் மேல் தளத்தில் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.



அத்துடன் தற்காலத்திற்கேற்ப பயிற்சி நெறிகளை மேம்படுத்தும் நோக்கில் கடந்த 22.06.2018 அன்று இடம்பெற்ற 5ஆவது அமர்வில் சபையின் பரிசீலனைக்காகவும், அனுமதிக்காகவும் நிதிக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்டு முதல்வரினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையானது சபையின் ஏகமனதான அனுமதியுடன் பின்வரும் தையல் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கி வைக்கப்பட்டன.

- **சாதாரண** (Normal) **வகை** - 05 **இயந்திரம்**
- YUKI **வகை** - 01 **இயந்திரம்**
- Zig Zag **வகை** - 01 **இயந்திரம்**
- **பிளாஸ்ரிக் கதிரைகள்** (Plastic Chairs) - 30
- **வைற் போட்** (White board) - 01



இவை 2018.10.15 ஆம் திகதியன்று அரசாங்க அதிபர் மா.உதயகுமார், கௌரவ முதல்வர், கௌரவ பிரதி முதல்வர், மாநகர ஆணையாளர், பிரதி ஆணையாளர் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் பிரசன்னத்தில் வழங்கி வைக்கப்பட்டன.

## 21. சுகாதாரமான விலங்கறுமனை (Slaughter house)

மாநகர மக்களுக்கான சுத்தமானதும், சுகாதாரமானதுமான இறைச்சிகளை வழங்குவது தொடர்பில் மாநகர விலங்கறுமனையின் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் விலங்கறுமனையை முழுமையான கண்காணிப்புக்குள் கொண்டுவர மட்டக்களப்பு மாநகர சபையானது நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக அரச சட்டதிட்டங்களுக்கு இணங்க, மாடுகள் அறுக்கப்படுவதற்கு முன்னர் 24 மணித்தியாலங்கள் விலங்கறுமனையில் கட்டப்பட்டு மாநகர சபையினால் பராமரிக்கப்பட வேண்டியுள்ளது.

இங்கு கட்டப்படும் மாடுகளுக்கு மாநகர சபையினால் உணவு (வைக்கோல்) கொள்வனவு செய்யப்பட்டு, அவற்றின் உடல் நிலை தொடர்பில் அவதானிக்கப்படுவதுடன், கால் நடைகள் அறுக்கப்படுவதற்கு முன்னர் கால்நடை வைத்தியரின் முழுமையான சோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் பணிக்கப்பட்டது.

மேலும் விலங்கறுமனையில் இடம்பெறுவதாக முறைப்பாடு செய்யப்படும் குற்றச்சாட்டுக்களை குறைக்கும் விதத்தில் உரிய இடத்தினை கண்காணிப்பதற்காக கண்காணிப்பு கமராக்களை (CCTv Camera) பொருத்துவதற்கும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் பன்றி இறைச்சி விற்பதற்கான அனுமதி கோரல் கடிதங்கள் தொடர்ச்சியாக மாநகர சபைக்கு கிடைக்கப்பெற்று வருவதனால், சத்துருக்கொண்டானில் அமைந்துள்ள விலங்கறுமனைக்கு அருகாமையில் தற்போதுள்ள விலங்கறுமனையுடன் எவ்விதத்திலும் எந்தவொரு பன்றி அறுவை நடவடிக்கைகளும் தொடர்புபடாத விதத்திலும், எந்தவொரு சமூகத்தினுடைய மத நம்பிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படாத விதத்திலும் பன்றி வெட்டுவதற்கான விலங்கறுமனையை தனியாக அமைப்பதற்கு முன்மொழியப்பட்ட பிரேரணை மீது இடம்பெற்ற வாக்களிப்பின் போது சபையமர்வில் கலந்து கொண்டிருந்த 37 கௌரவ உறுப்பினர்களில் 20 பேர் ஆதரவாக வாக்களித்ததன் பிரகாரம் மாநகர சபையினால் தீர்மானம் (BMC/GM-05(06)/2018-06) நிறைவேற்றப்பட்டது.

## 22. வாராந்த சந்தைகள்



மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட கிராமங்கள் மற்றும் போதிய வளர்ச்சி காணாத பிரதேசங்களை அடையாளம் கண்டு அவற்றினை அபிவிருத்தி செய்யும் வகையில் முதற்கட்டமாக திருப்பெருந்துறை மற்றும் கருவேப்பங்கேணி ஆகிய பிரதேசங்களில் வாராந்த சந்தை (அங்காடி) ஆரம்பிப்பதற்கு மாநகர சபையினால் 31.05.2018 அன்று இடம்பெற்ற 3ஆவது அமர்வில் அனுமதியளிக்கப்பட்டு ஏகமனதாக தீர்மானம் (BMC/GM-03(04)/2018- 28) நிறைவேற்றப்பட்டது. இதற்கமைய கருவேப்பங்கேணி கிராமத்தில் முதற்கட்டமாக ஓர் வாரந்த சந்தையினை அமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

# 23. நுண்கடன் தொடர்பான செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல்



நுண்கடன் முறைமையை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி மக்களை ஏமாற்றுகின்ற தனிநபர்களும், நிறுவனங்களும் இன்று எமது நாட்டில் அதிகரித்து, பல பாதக விளைவுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றனர். இதனால் தற்கொலை வரை மோசமான சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

மேலும் இதற்கெதிராக நாடு பூராக எதிர்ப்பு கோசங்கள் எழுந்து வருகின்றன. இதன் தாக்கம் மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன. அந்தவகையில் ஒரு குழு ஒன்றினை அமைத்து இதற்கான தீர்வுத்திட்டங்களை முன்வைக்க 31.05.2018 அன்று இடம்பெற்ற 3ஆவது அமர்வில் அனுமதியளிக்கப்பட்டு ஏகமனதாக தீர்மானம் (BMC/GM-03(04)/2018- 29) ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்படி நுண்கடன் தொடர்பான குழுவானது நுண்கடன் தொடர்பாக ஆராய்ந்து 2018.08.30 நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்தது.



சமகாலத்தில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் நுண்கடன் பிரச்சனைகளால் இடம்பெறும் தற்கொலைகள், மற்றும் கலாசார சீரழிவுகளை மட்டுப்படுத்தும் நோக்கிலும் நுண்கடன்களை வளங்கும் நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே உள்ள முரண்பாடுகளை தீர்க்கும் நோக்கிலும் இக் கூட்டத்தின் கலந்துரையாடல்கள் அமைந்திருந்தன.

மாநகர சபையின் எல்லைக்குள் இயங்கும் நுண்கடன் நிறுவனங்கள் என்னென்ன காரணங்களுக்காக கடன் வழங்குகின்றன? கடன் வழங்க கோரப்படும் ஆவணங்கள் எவை? அந்தக் கடன்களுக்கான வட்டி வீதம் என்ன? மீளப்பெற்றுக்கொள்ள நிறுவனம் பின்பற்றும் வழிமுறைகள் என்ன? எனப் பல்வேறு விடயங்கள் தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. பொது மக்களால், நுண்கடன் நிதி நிறுவனங்கள் தொடர்பில் மாநகரசபைக்கு வளங்கப்பட்ட முறைப்பாடுகளும் இக் கூட்டத்தில் படித்துக்காட்டப்பட்டன.

இக்கலந்துரையாடலின் ஊடாக மாநகர முதல்வர், தனது எல்லைக்குள் செயற்படும் நிதி நிறுவனங்கள் அனைத்தும் மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும், அதேவேளை மாநகர சபையின் வியாபார அனுமதியையும் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு இல்லாத நிறுவனங்கள் தாமாகவே வெளியேறிச் செல்ல வேண்டும். கடன் வளங்குவதற்கு முன்னர் வாடிக்கையாளர்களின் தொழில், வருமானம், தங்கிவாழ்வோர் தொடர்பாக அதிக கவனம் செலுத்த வேண்டும். எனத் தெரிவித்தார்.

அதுமட்டுமன்றி, நிதி நிறுவனங்களுக்காக களத்தில் செயற்படும் ஊழியர்கள் அதெற்கென பயிற்றப்பட்டவர்களாக இருக்க வேண்டும் அவர்கள் வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கு சென்று அறவீடு செய்ய முடியாது. விண்ணப்பப் படிவங்கள் தமிழில் இருக்க வேண்டும், அது பொருள் விளங்கும் வகையில் வாடிக்கையாளர்களுக்கு படித்தும் காட்டப்பட வேண்டும். ஒரே வட்டி வீதத்தின் கீழ் இயங்க அனைத்து நுண்கடன் நிறுவனங்களும் முன்வர வேண்டும், நுண்கடன் தொடர்பான அடுத்தடுத்த கூட்டங்களுக்கு நுண்கடன் நிதி நிறுவனங்களின் உயர்நிலை அதிகாரிகள் சமுகமளிக்க வேண்டும். என்று பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த தீர்மானங்களுக்கு ஏற்ப செயற்படத் தவறும் நிறுவனங்களின் வியாபார அனுமதி மாநகர சபையால் இரத்துச் செய்யப்படும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

## 24. “வருமான அறவீட்டு” மாதம்

மட்டக்களப்பு மாநகர சபைக்கான வருமான நிலுவைகளை அறவிடும் நோக்கில் செப்டெம்பர்



மாதமானது “வருமான அறவீட்டு” மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மாநகர சபைக்குட்பட்ட 20 வட்டார மக்களுக்கும் துரித அபிவிருத்திகளை மேற்கொள்ளும் நோக்கோடு, இதுவரையில் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ள ஆதனவரி, வியாபார வரி மற்றும் ஏனைய நிலுவைகளை அறவிடுவதற்காகவே இந்த பிரகடனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆசியா மன்றத்தின் அனுசரணையில் இடம்பெறும் இத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வானது 04.09.2018 அன்று மாநகர சபையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தி.சரவணபன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகர ஆணையாளர் ந.மணிவண்ணன், பிரதி ஆணையாளர் நா.தனஞ்ஜெயன், ஆசிய மன்றப் பணிப்பாளர் கோபாதம்பி குமார், சிரேஸ்ட ஆலோசகர் ஜெயதிஸ்ஸ, நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் சசிகரன், மாநகர சபை உறுப்பினர்கள், மாநகரசபையின் ஊழியர்கள் மற்றும் வரியிறுப்பாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மாநகர முதல்வரால் வருமானவரி அறிவீட்டு மாதத்திற்கான பிரகடனம் வாசிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 20 வட்டாரங்களுக்கும் 10 குழுக்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு, அவர்களிற்கான பணிகளும் பொறுப்பளிக்கப்பட்டன.

இந்த வருமானவரி அறிவீட்டு மாதத்தில், முதலாம் வாரம் வரி அறவீட்டுக்கான விழிப்புணர்வு வாரமாகவும், இரண்டாம் மற்றும் மூன்றாம் வாரங்கள் வீடுகள், மற்றும் வியாபார நிலையங்களுக்கு சென்று வரி அறவீடு செய்யும் வாரமாகவும், இறுதி வாரம் வரி செலுத்தாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வாரமாகவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நிறைவில் சிறந்த வரி செலுத்துனர், சிறந்த வரி வசூலிப்பாளர்கள், சிறந்த வரி வசூலிப்புக் குழு என தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 25. நூலகர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு



தற்காலத் தொழிநுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப நூலகங்களிடையே நூலக மென்பொருள் பாவனையை நிறுவுவதோடு, அவற்றை இலத்திரனியல் நூலகங்களாக வடிவமைத்து வாசகர்களின் நூலகப் பயன்பாட்டினையும், வாசிப்பு பழக்கத்தினையும் அதிகரிக்கும் நோக்கோடும், தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நூலக ஆளனியினருக்கான Koha பயிற்சிக் கருத்தரங்கானது 29.10.2018 அன்று மட்டக்களப்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாநகர சபையின் நூலகக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கினை மாநகர முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன்,

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சி.பிரகாஸ், மாநகர ஆணையாளர் க.சித்திரவேல், பிரதி ஆணையாளர் நா.தனஞ்செயன், மாநகர நூலகக் குழுவின் தலைவரும் மாநகர சபை உறுப்பினருமான வே.தவராஜா ஆகியோர் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர்.

இக் கருத்தரங்கின் விரிவுரைகளை கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட நூலகரும், இலத்திரனியல் நூலகத் திட்டத்தின் வளவாளருமான எம்.என்.ரவிக்குமார் நடாத்தினார். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கும் நூலகங்களில் பணியாற்றும் 50 இற்கும் அதிகமான நூலகர்கள் இந்தப் பயிற்சிக் கருத்தரங்கில் பங்குபற்றியிருந்தனர்.



## 26. மாநகருக்குள் அரச ஹோமியோபதி மருத்துவமனை.




உலகில் இன்று, ஆங்கில மருத்துவத்துக்கு அடுத்து மிக அதிக மக்களால் நம்பி பின்பற்றப்பட்டு வருகின்ற மருத்துவம் என்றால் அது ஹோமியோபதி மருத்துவம் தான். ஆங்கில மருத்துவர்களே வியக்கும் வண்ணம் நீடித்த மருத்துவச் சிகிச்சை தேவைப்படும் சில பிரச்சனைகளுக்கு ஹோமியோபதி மருத்துவத்தில் நிரந்தரமாகவும், முழுமையாகவும் தீர்வு இருக்கிறது என்று ஹோமியோபதி மருத்துவர்கள் சொல்கிறார்கள்.

மிகவும் எளியது எல்லா வயதினருக்கும் ஏற்றது மருந்துகளின் விலை மலிவு, பக்கவிளைவுகள் இல்லாதது நோய்க்குப் பதிலாக நோய் காரணிகளுக்கு மருந்து கொடுக்கப்படுவதால், ஆச்சரியப்படத்தக்க, அதிசயிக்கத்தக்க அளவுக்கு பல நன்மைகள் கிடைக்கின்றன. என்பது ஹோமியோபதி மருத்துவம் குறித்து சொல்லப்படும் கருத்துக்கள்.

இத்தகைய பல நன்மைகளைக் கொண்டுள்ள ஹோமியோபதி வைத்தியசாலை மட்டக்களப்பு மக்களும் நாடி பயன்பெறும் வகையில் கௌரவ முதல்வரின் வேண்டுகோளின் பெயரில் சுகாதார, போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் ஊடாக மட்டக்களப்பு நகரில் ஹோமியோபதி வைத்தியசாலையானது 04.01.2019 அன்று திறந்து வைக்கப்பட்டது.



ஹோமியோபதி வைத்தியசாலையானது வெலிசறையில் முதன்முதலாக அமைக்கப்பட்டது. அதனையடுத்து தெஹிவளை, மாத்தளை, வறக்காபொல, பாலமுனை, இங்கிரிய குருநாகல் ஆகிய இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இலங்கையின் எட்டாவது வைத்தியசாலையாக இவ் அரச ஹோமியோபதி வைத்தியசாலையானது அமைக்கப்பட்டுள்ளமை விஷேட அம்சமாகும்.

மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் கௌரவ தி.சரணவணபவன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இவ் வைத்தியசாலையினைத் திறந்து வைத்தார்.



கௌரவ அதிதிகளாக பிரதி முதல்வர் க.சத்தியசீலன் மற்றும் மாநகர சபையின் கௌரவ உறுப்பினர்களும், சிறப்பு அதிதியாக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் மா.தயாபரன் அத்துடன் மாநகர ஆணையாளர் கா.சித்திரவேல், பிரதி ஆணையாளர் நா.தனஞ்சயன், ஹோமியோபதி வைத்தியர் பி.பிரவீனா, மாநகர பிரதம கணக்காளர் திருமதி ஜீ.ஹெலன் சிவராஜா, நிர்வாக உத்தியோகத்தர் திருமதி ரோகினி விக்னேஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு பிரதான பஸ் தரிப்பிடத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள இவ் ஹோமியோபதி வைத்தியசாலையில் இலவசமாக மருத்துவ வசதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், வைத்திய ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள முடியும். இதற்கு பொறுப்பாக இவ் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி எம்.ஏ.எம்.முனீர் கடமையாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



## 27. பொது போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கும் இடையூறாக இருக்கும் மரங்களை அகற்றுதல்

மழை காலங்களில் பாரிய அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு மரங்களும் ஓர் காரணமாக அமைந்து விடுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு முன் கூட்டியே அம் மரங்களை வெட்டி அகற்றுவதற்கு உரிய நடைமுறைகளை மேற்கொள்வதற்காக மாநகர சபையின் நிர்வாக



பிரிவிற்குள் வதிகின்ற பொதுமக்களுக்கு அயலவரின் குடியிருப்புக்களில் அரச பொதுக் காணிகளில் உள்ள மரங்களினால் ஆபத்துக்கள் அல்லது தொல்லைகள் ஏற்படுவது பற்றி முறைப்பாடு செய்யப்பட்டதன் அல்லது அவதானிக்கப்பட்டதன் பேரில் குறித்த மரத்தினை வெட்டி அகற்றுமாறு போதுமான கால அவகாசத்துடன் எழுத்து மூலமான அறிவித்தல்களும், கடிதங்களும் குறித்த மரங்கள் அமைந்துள்ள அவ்வவ் காணி உரிமையாளர்களுக்கு மற்றும் அவ் ஆதனத்தை பயன்படுத்துபவர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன.

அவ்வாறு வழங்கப்பட்ட அறிவித்தலுக்கு ஏற்ப நடவடிக்கையை எடுக்கத் தவறும் பட்சத்தில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அம்மரத்தினை அகற்றுவதற்கான நீதிமன்ற ஆணையைப் பெற்றுக் கொள்வதற்கு மாநகர சபையினால் அனுமதி வழங்கப்பட்டு ஏகமனதாக **BMC/ GM-08(10)/2018- 25** எனும் இலக்கத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு அம் மரங்கள் மாநகர சபையினால் அகற்றப்பட்டு வருகின்றன.



## 28. உணவகங்களுக்கான தரச் சன்றிதழ்களை வழங்கல்

எமது மட்டக்களப்பு மாநகர வாழ் மக்களினதும், வெளி மாவட்டங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் மட்டக்களப்பு மாநகருக்குள் வரும் பெருமளவான மக்களினதும் குடிநீர் உட்பட பல்வேறு தேவைகளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு எமது மாநகர சபைக்கு உள்ளது.

அதற்கேற்ப மாநகர அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள உணவகங்களின் தரம் குறித்தும் அங்கு சமைக்கப்படும் உணவின் சுகாதார நிலமைகள் குறித்தும் ஆராய்ந்து அவற்றை வகைப்படுத்தும் நடவடிக்கைகளை பொது சுகாதார பரிசோதகர்களுடன் இணைந்து மாநகர சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டிருந்தனர்.



இதன்படி உணவகங்கள் சோதனை செய்யப்பட்டு அவற்றிற்கான தரச்சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வானது மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் ஏ(A) தரத்திலான 15 உணவகங்களுக்கும் பி(B) தரத்தினலான 23 உணவகங்களுக்கும் தரச் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன். சீ(C) மற்றும் டி(D) தரநிலையில் உள்ள உணவகங்கள் ஏ மற்றும் பீ சான்றிதழ்களை ஒரு மாதகாலத்திற்குள் பெற்றுக் கொள்ளாதுவிட்டால் அந்த உணவகங்களின் அனுமதிகள் இரத்து செய்யப்படும் என மட்டக்களப்பு மாநகர முதல்வர் தெரிவித்தார்.

அத்துடன் மட்டக்களப்பு மாநகர சபைக்குள் உள்ள உணவகங்களில் பயன்படுத்தப்படும் இறைச்சிகளில் 75 வீதத்திற்கும் மேற்பட்ட இறைச்சி மாநகர சபைக்கு வெளியில் இருந்து கொண்டுவருவதாக தெரியவருகின்றது. குறிப்பாக மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட



பகுதிகளில் வெட்டப்படும் இறைச்சிகள் எமது சுகாதார பிரிவினரால் உறுதிப்படுத்தப்படுகின்றது. ஆனால் வெளியில் இருந்து வரும் இறைச்சிகளை யாரும் உறுதிப்படுத்த முடியாது. எனவே இறைச்சிகளை வெளியில் இருந்து கொண்டு வருவதும் நிறுத்தப்பட்டு மட்டக்களப்பு மாநகர சபைக்குள்ளேயே அவற்றினை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.



## 29. தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல்

கடந்த 22.10.2018 அன்று தனியார் கல்வி நிறுவனங்களின் உரிமையாளர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் அடிப்படையில், தமது கல்வி நிலையங்களில் கல்வி பயில வரும் மாணவர்களின் அடிப்படை சுகாதார வசதிகள், இருக்கை வசதிகள், போதிய வெளிச்சத்துடன் காற்றோட்டம் நிலவக் கூடிய சூழல் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதி செய்யக் கூடிய வகையில் கல்வி நிலையங்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்க வேண்டும் என உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.



அத்துடன் மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் செயற்படுகின்ற அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களின் பிரத்தியேக கல்வி நடவடிக்கைகள் யாவும் ஒருவாரம் இடை நிறுத்தி அவை அனைத்தும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என 06.12.2018 அன்று நடைபெற்ற 12ஆவது சபை அமர்வில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இத் தீர்மானத்தின்படி மாநகர ஆணையாளரால் உரிய கல்வி நிறுவனங்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டதுடன் குறித்த இருவார தடையுத்தரவுக் காலத்திற்குள் அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களின் உட்கட்டுமான வசதிகள், பாதுகாப்பு, கட்டணங்கள் அனைத்தும் ஒழுங்குபடுத்தப்பட்டு அவை தொடர்பாக மாநகர சபையினால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே கல்வி நிறுவனங்கள் அனைத்தும் மீள ஆரம்பிக்கப்பட்டன.

இதன்படி மாணவர்கள் ஆரோக்கியமான சூழலில், ஈர்ப்புடனான கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், தனியார் கல்வி நிறுவகங்களுக்கு தமது பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர் நிம்மதியான மனோநிலையினை அடையும் வகையிலும் கள விஜயங்களும் மேற்கொள்ளப்பட்டன.







## 30. டெங்கு அபாயமற்ற மாநகரை உருவாக்குதல்.

கடந்த மூன்று வருடங்களாக மட்டக்களப்பு மாவட்டமானது ஓர் டெங்கு அபாயகர மாவட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக மட்டக்களப்பு மாநகர சபையானது டெங்கு ஒழிப்பு செயற்பாட்டில் தீவிரமான கவனத்தை செலுத்த ஆரம்பித்ததுடன், பல அதிரடி நடவடிக்கைகள் மூலம் டெங்கு நுளம்பினை ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது.



இதனடிப்படையில் சுகாதார வைத்திய அதிகாரிகளுடன் (MOH) இணைந்து மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினரும் துப்பரவு செய்யும் செயற்பாடுகளையும், மக்களை விழிப்படையச் செய்யும் முன்னேற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இதன் மூலம் வாரம் ஒன்றுக்கு 61 ஆக அறிவிக்கப்பட்ட டெங்கு நோயாளர் எண்ணிக்கையை கடந்த செப்டெம்பர் மாதம் 30% ஆக குறைக்கக் கூடியதாக இருந்தது.

அத்துடன் இச்செயற்பாடுகளை தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து மேலும் பல பிரதேசங்களில் முன்னெடுத்து வரமுடிகின்றமையால் மட்டக்களப்பு மாவட்டத்தினை டெங்கு அபாய மாவட்டம் என்ற நிலையிலிருந்து குறுகிய காலத்திற்குள் மாற்ற முடிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 31. ஒரு நாளைக்கு இரண்டு வேளைகளில் திண்மக்கழிவு அகற்றல் செயற்பாடுகள்

எமது மாநகர நிர்வாக எல்லைக்குள் திண்மக் கழிவு அகற்றல் செயற்பாடுகளை துரிதப்படுத்தும் நோக்கோடும் சுத்தமான மாநகரை உருவாக்கும் நோக்கோடுமாக இதுவரை



காலமும் ஒரு வேளை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டு வந்த திண்மக்கழிவு அகற்றல் செயற்பாடுகளை ஒரு நாளைக்கு இரண்டு வேளைகளில் இடம்பெறும் வகையில் கடமைப் பட்டியலை மாற்றுமாறு கௌரவ முதல்வர் பணித்தமையைத் தொடர்ந்து, மாநகர பிரதி ஆணையாளரினால் கடந்த ஜீன் மாதம் முதல் மாற்றியமைக்கப்பட்டு தற்போது காலை, மாலை என இரு வேளைகளில் திண்மக் கழிவகற்றல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. தற்போது இது வினைத்திறனான ஒரு செயற்பாடாக இடம் பெறுவதாக மக்கள் பலர் பாராட்டியும் வருகின்றனர்.

## 32. சாய்ப்புச் சட்ட நடைமுறைப்படுத்தல்

மாநகர எல்லைக்குள் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் வேலை செய்யும் ஊழியர்கள் குறிப்பாக பெண் பிள்ளைகள் தாம் ஊழியர் சட்ட நடைமுறைகளை மீறி விடுமுறை இன்றி வாரம் முழுவதும் பணியாற்றி வருவதாகவும், தமக்கு விடுமுறை நாள் ஒன்றினை நிர்ணயித்துத் தருமாறும் மாநகர சபைக்கு விடுத்த கோரிக்கைக்கு அமைய மாநகர நிர்வாக எல்லைக்குள் சாய்ப்புச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதென கடந்த 04ஆவது பொது அமர்வில் ஏகமனதாக தீர்மானம் (BMC/GM-03(04)/2018 – 39) நிறைவேற்றப்பட்டது.




அதனடிப்படையில் மருந்தகங்கள், உணவகங்கள், பல சரக்கு கடைகள், சிகை அலங்கார நிலையங்கள் மற்றும் வாகன திருத்தகங்கள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்கள் அனைத்தும் உடனடியாக பிரதி ஞாயிறு தோறும் இந்த சாய்ப்புச் சட்டத்தை பின்பற்ற வேண்டும் என அறிவித்தல் விடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றது.

## 33. நானாவிதப் பகுதிக்குரிய மென்பொருள் (online payment) நிறுவல்

மாநகர சபையின் நானாவித வருமானப் பகுதியின் செயற்பாடுகளை இலகுவாக்கும் வகையிலும், மக்களின் அசௌகரியங்களைக் குறைக்கும் வகையிலும் தற்கால நவீன தொழிநுட்பத்திற்கு ஏற்ப மேற்கொள்வதற்கென்று ஓர் மென்பொருளினை நிறுவுவதற்கான நடைமுறைகள் இடம்பெற்று வருகின்றன.

இதன் ஊடாக மாநகர சபைக்கு வரவேண்டிய வருமான சேகரிப்பினை வினைத்திறனாக மேற்கொள்ள முடிவதோடு அதற்காக ஏற்படுகின்ற நிருவாகச் செலவுகளையும் குறைக்க வாய்ப்புள்ளது.





## 34. பௌர்ணமிக் கலை விழா



மட்டக்களப்பிற்கே தனித்துவமான கலைகளையும், கலைஞர்களையும் வளர்த்தெடுக்கும் நோக்கோடு மட்டக்களப்பு மாநகர சபையானது கலை, கலாசார நிலையியற் குழு ஒன்றினை ஸ்தாபித்திருந்தது. இதன் செயற்பாடுகள் காலத்தின் தேவைக்கேற்ப மிகவும் வினைத்திறனாக அமைந்துள்ளது.



இதன் ஓர் அம்சமாக மாதாந்தம் பௌர்ணமி கலை விழாவினையும் சிறப்பாக நடாத்தி வருகின்றது. இங்கு பாரம்பரிய கலை அம்சங்களும், கலாசார விழுமியங்களையும், தமிழர்களின் தொன்மைகளையும் பறைசாற்றும் சிறப்புரைகளும், உள்ளூர் கலைஞர்களின் நகைச்சுவை நாட்டியங்களும் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.



இக்கலை விழாவானது கலைஞர்களை ஊக்கு வித்து கலைகளை வளர்ப்பதோடு மட்டும் நில்லாது அக் கலைஞர்களுக்கான வாழ்வியலை உயர்த்தும் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றது.

## 35. வியாபார நிலையங்களின் பெயர்ப்பலகைகளை ஒழுங்கமைத்தல்

மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பெயரிடப்படாத வீதிகள், வீதிகளின் பெயர்கள் தொடர்பாக காணப்படும் முறைப்பாடுகள் மற்றும் வீதிகள் - வியாபார நிலையங்களின் பெயர்ப்பலகைகளில் உள்ள மொழிப்பாவனை ஒழுங்கமைத்தல் என்பவைகள் தொடர்பாக




ஆய்வு செய்து அது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென ஓர் குழு ஒன்றினை **BMC/ GM-06(08)/2018- 16** எனும் தீர்மானத்தின் ஊடாக கௌரவ முதல்வர் அவர்கள் உருவாக்கியிருந்தார்.

இதன்படி கௌரவ உறுப்பினர் வேலுப்பிள்ளை தவராஜா அவர்களின் தலைமையில் கௌரவ உறுப்பினர்களான திரு.தெய்வநாயகம் சிவலிங்கம், திரு.விஜயகுமார் பூபாலராஜா, திரு.மாசிலாமணி சண்முகலிங்கம், திரு.சீனித்தம்பி ஜெயந்திரக்குமார், திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் ஆகியோர் உட்பட 06 கௌரவ உறுப்பினர்களை உள்ளடக்கியதாக விசேட குழுவொன்று உருவாக்கப்பட்டு தற்போது வரை பல வீதிகளினதும், வியாபார நிலையங்களினதும் பெயர் பலகைகள் திருத்தப்பட்டுள்ளன.



## 36. ஆசிய மன்றத்தின் (Asia Foundation) நிதி அனுசரணையுடனான வேலைத் திட்டங்கள்.

ஆசிய பவுண்டேசன் நிறுவனத்தொடு இணைந்து பல செயற்பாடுகளை மாநகர சபையானது மேற்கொண்டு வருகின்றது.

1. நடமாடும் வருமான சேகரிப்பு வாகனம்
   வரி வருமானத்தை இலகுவாக அறவிடும் நோக்கோடு நடமாடும் வருமான சேகரிப்பு வாகனம் (Mobile Revenue Collection Vehicle) ஒன்றினை வடிவமைத்து மக்களின் காலடிக்குச் சென்று அறவிட்டு வருகின்றது.




2. முகப்பு அலுவலகம் அமைத்தல் (Front Office)
   மாநகர சபைக்கு தமது தேவைகளையும், சேவைகளையும் நாடிவரும் பொது மக்களுக்கு இலகுவானதும், துரிதமானதுமான சேவையினை வழங்கும் நோக்கோடு மாநகர சபைக்கான முகப்பு அலுவலகம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றது.



3. பிளாஸ்டிக் போத்தல்களை சேகரிக்கும் பணிகள்
   பிளாஸ்டிக் குப்பைகளினால் எதிர்காலத்தில் சூழல்சார் பிரச்சனைகள் ஏற்படாமல் தடுக்கும் நோக்கில் மாநகர நிர்வாக எல்லைக்குள் வீசப்படும் பிளாஸ்டிக் குப்பைகளை குறிப்பாக பிளாஸ்டிக் போத்தல்களை (Pet Bottles) முறையாக சேகரித்து அவற்றை மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் வகையில் ஆசிய மன்றத்தின் துணையோடு, கொக்ககோலா மென்பான நிறுவனத்துடன் இணைந்து மாநகர சபையானது மேற்கொண்டு வருகின்றது.





இதற்கமைய முதற்கட்டமாக மேற்படி பிளாஸ்டிக் போத்தல்களை (Pet Bottles) முறையாக சேகரிக்கும் வண்ணம் பொதுமக்கள் அன்றாடம் கூடும் இடங்களை தெரிவு செய்து அங்கு சேகரிப்புத் தொட்டிகள் வைக்கப்பட்டு அவை வாராந்தம் மீள்சுழற்சிக்காக எடுக்கப்படுகின்றன.

## 37. தேசிய வாசிப்பு மாதம்.



தேசிய ரீதியாக அக்டோபர் மாதமானது தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டு வருகின்ற செயற்பாட்டிற்கு இயைவாக கடந்த வருடம் எமது மாநகர சபையும் பல்வேறு வாசிப்பு மாத நிகழ்வுகளை திட்டமிட்டு மேற்கொண்டிருந்தது.

இதன்படி ஆசிய மன்றத்தின் அனுசரணையில், மட்டக்களப்பு மாநகரசபையினால் மாபெரும் புத்தக கண்காட்சியொன்று மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடாத்தப்பட்டது.



இலங்கையின் பிரபல புத்தக சாலையான பூபாலசிங்கம் புத்தக சாலையின் பிரதான பங்களிப்புடன் இடம்பெற்ற குறித்த கண்காட்சியில் பிரபல எழுத்தாளர்கள் பற்றிய நூல்கள், இந்திய எழுத்தாளர்களின் நூல்கள், பாடசாலை மாணவர்களுக்கான நூல்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கான நூல்கள், ஆய்வாளர்களுக்கான நூல்கள், ஆன்மீகம் தொடர்பான நூல்கள், சிறுவர்கள் முதல் முதியவர்கள் என பல்வேறு தரப்பினருக்குமான நூல்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டன.

அத்துடன் வாசிப்பு மனிதனை முழுமையடையச் செய்கின்றது என்ற தொனிப்பொருளில் கல்லடி பொதுநூலகத்திலும் ஓர் புத்தக கண்காட்சியும் மாநகர சபையின் கலை கலாசாரப் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.





தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு புகைப்படக் கலைஞர்களின் திறமைகளை உலகறியச் செய்யும் நோக்கில் ஆசிய மன்றத்தின் அனுசரணையில் மட்டக்களப்பு மாநகர சபையின் ஏற்பாட்டில் புகைப்படக் கண்காட்சியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



இது 2018.12.12 அன்று தொடக்கம் 2018.12.12 வரை மட்டக்களப்பு காந்திப் பூங்கா முன்றலில் 3 நாட்கள் இடம்பெற்றது. குறிப்பாக மட்டக்களப்பு மாநகரின் தொன்மையான வரலாறுகளையும், கலை கலாசார அம்சங்களையும், சுற்றுலா மையங்களையும் பறைசாற்றும் விதத்தில் இது அமைந்திருந்தது.





## 38. உப விதிகளை உருவாக்குதல் பற்றிய கலந்துரையாடல்



மட்டக்களப்பு மாநகருக்குள் வதியும் மக்கள் எதிர்கொள்ளும் சுகாதாரப் பிரச்சனைகளிலிருந்து அவர்களை மீட்டு தூய்மையான மாநகரை உருவாக்குவதற்கு தடையாக உள்ள சுகாதாரம் சார் பிரச்சனைகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்யும் நோக்கோடு மட்டக்களப்பு மாநகரசபைக்கு என்று உப விதிகளை உருவாக்குதல் பற்றிய கலந்துரையாடல் மாநகர ஆணையாளர் கா.சித்ரவேல் தலைமையில் 29.11.2018 அன்று மட்டக்களப்பு மாநகரசபை குழு மண்டபத்தில் இடம்பெற்றது.



இதுவரை காலமும் 1947 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க மாநகரக் கட்டளைச் சட்டத்திற்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த சுகாதார நலன்பேணல் விடயங்களை தற்காலத்திற்கு ஏற்ப மாற்றியமைப்பதற்கும், நவீனமயமாக்கலின் ஊடாக மக்கள் எதிர்கொள்ளும் சுகாதாரப் பிரச்சனைகளிலிருந்து அவர்களை மீட்டு தூய்மையான மாநகரை உருவாக்குவதற்கும். இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



மேற்படி கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி முதல்வர் க. சத்தியசீலன், மாநகரசபை உறுப்பினர்களான சிவம் பாக்கியநாதன், இரா. அசோக், மாநகர பிரதி ஆணையாளர் நா.தனஞ்ஜெயன் மற்றும் மாநகர உத்தியோகத்தர்களுடன், வலயக்கல்வி சுகாதார வைத்திய அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிமனையின் அலுவலகத்தினர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுற்றுச்சூழல் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், ஜெய்க்கா நிறுவனத்தின் தொண்டர் பணியாளர்கள், சமூக நலன் விரும்பிகள், வர்த்தக சம்மேளனத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டு தமது கருத்துகளையும், உப விதி அமைவுக்கான ஆலோசனைகளையும் முன் வைத்தனர்.

## 39. பொது நூலகம்



மட்டக்களப்பு மாநகர சபைக்கான பொது நூலகமானது கடந்த 2012 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு அரைகுறையாக கட்டப்பட்ட நிலையில் இடை நடுவே நிறுத்தப்பட்டிருந்தது. அப் பணிகளை மீண்டும் தொடர்ந்து கொண்டு செல்வதற்கான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதியினை பெற்றதோடு, கடந்த ஆகஸ்ட் மாதம் திறைசேரி ஊடாக பிரதம மந்திரி கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு மதிப்பீடுகள் மற்றும் முறையான விண்ணப்பங்களை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டன.



நூலக கட்டிடத்தினை கட்டி முடிக்க வேண்டிய அவசியத்தினை உணர்ந்து கொண்ட கௌரவ பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்கள் தனது அமைச்சின் மூலம் ரூபா.169.97 மில்லியன் (16.997 கோடி) இற்கான அமைச்சரவை பத்திரத்தை, அமைச்சரவையின் அனுமத்திக்காக நகர்த்தியிருந்தார். இதற்கமைய கடந்த 11.09.2018ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இத்தொகை அமைச்சரவைவினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு உள்ளூராட்சி அமைச்சின் ஊடாக 100 மில்லியன் ரூபாய்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனைக் கொண்டு தற்போது நூலகக் கட்டிடத்தினை அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



## 40. இலத்திரனியல் விலைப் பட்டியல் மற்றும் பொதுத் தராசினை நிறுவுதல்



நுகர்வோர் அதிகார சபையின் புள்ளி விபரங்களின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் பொது மகனொருவர் 1000.00 ரூபாய்க்கு பொருளை கொள்வனவு செய்யும் போது அதில் 107.00 ரூபாய் வரை அதிகமாக செலவு செய்கின்றார்.

எனவே இதனை நிவர்த்தி செய்யும் நோக்குடன் சம்மந்தப்பட்ட திணைக்களங்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு. அதனடிப்படையில் ஒரு குழு ஒன்று அமைக்கப்பட்டு சட்டத்திற்கு முரணான வகையில் செயற்படும் வியாபார நிறுவனங்களுக்கும், உரிமையாளர்களுக்கும் எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அத்துடன் இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகள் மேலும் தொடராத வண்ணம். ஒரு சில ஒழுங்கு முறைகளை மாநகர சபையானது நடைமுறைப்படுத்தி வருகின்றது. முதற்கட்டமாக மாநகர பொதுச் சந்தையை ஒரு நவீன சந்தையாக மாற்றி. இலத்திரனியல் பெயர்ப் பட்டியல் ஒன்றை நிறுவி அதில் ஒவ்வொரு நாளும் பொருட்களின் விலை மாற்றங்களைத் தரவேற்றம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த விலைப்பட்டியலானது பொதுச் சந்தை வாசலின் முன்னால் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். அதே நேரம் ஒரு பொதுத் தராசும் வைக்கப்பட்டிருக்கும். மக்கள் சந்தையில் கொள்வனவு செய்த பொருட்களை அந்த பொதுத் தராசில் வைத்து சாரிபார்த்துச் செல்லலாம்.



# 41. நவீன மயப்படுத்தப்பட்ட கல்லடி பொதுச் சந்தை

விஸ்தரிக்கப்பட்ட நவீன கடைத்தொகுதியுடன் கூடிய கல்லடி பொதுச் சந்தையானது (11.02.2019) அன்று மாநகர முதல்வர் தி.சரவணபவன் அவர்களால் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.




மட்டக்களப்பு நகரை அண்டிய கல்லடிப் பிரதேசமானது வர்த்தக ரீதியாக வளர்ச்சியடைந்து வரும் ஓர் பிரதேசமாக மாறி வருவதனை கவனத்தில் கொண்டு அங்குள்ள உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான சந்தைப்படுத்தல் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் கல்லடி மாநகர சந்தை வளாகத்தில் அமைக்கப்பட்ட கடைத்தொகுதியுடன் கூடிய சந்தை தொகுதியானது பொதுமக்களினதும், வர்த்தகர்களினதும் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபைக்கு என மக்களினால் செலுத்தப்பட்டு வரும் வரிப் பணமானது மீண்டும் அவர்களுக்கே சென்றடைய வேண்டும் என்ற நோக்கோடு மாநகர சபையின் நிதி மூலமாக நிர்மாணிக்கப்பட்ட இச் சந்தைத் தொகுதியினை எமது மக்களிடம் கையளிக்கப்பதில் தான் பெருமிதம் அடைவதாக மாநகர முதல்வர் கௌரவ தி.சரவணபவன் தெரிவித்தார்.



இந் நிகழ்வில் மாநகர ஆணையாளர் கா.சித்திரவேல், பிரதி முதல்வர் கந்தசாமி சத்தியசீலன், பிரதி ஆணையாளர் நாகராஜா தனஞ்ஜெயன், மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## 42. வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் திட்டம்



மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட புறநகர் பகுதிகளில் உள்ள மாணவர்களின் கல்வி தரத்தினையும், அவர்களின் கற்றலின் மீதான ஆர்வத்தினையும் அதிகரிக்கும் நோக்கில் மட்டக்களப்பு மாநகர சபையினால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.



வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளின் போது உபகரணப் பயன்பாடுகளினால் இலகுபடுத்தலுடன் மாணவர்கள் மகிழ்ச்சியாக செயற்பட்டுக் கற்கவும், கற்றல் பெறுபேறுகளை அதிகரிக்கச் செய்யவும் சந்தர்ப்பங்கள் ஏற்படக் கூடியதாக இருக்கும்

இவற்றைக்கருத்தில் கொண்டு மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட புறநகர் பகுதிகளில் உள்ள 14 பாடசாலைகளில் கல்வி கற்கும் சுமார் 1200 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

## 43. "முதல்வரிடம் சொல்லுங்கள்" Tell to Mayor

நவீன தொழிநுட்பத்துடன் கூடிய ஓர் மாநகரை கட்டியெழுப்பும் நோக்கோடு மட்டக்களப்பு மாநகர சபையும், I Community தொழிநுட்ப நிறுவனத்தினரும் இணைந்து மட்டக்களப்பு மாநகர சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் பிரச்சனைகளை மாநகர முதல்வரிடம் தெரியப்படுத்தி அவற்றுக்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் பொதுமக்களுக்கான **"முதல்வரிடம் சொல்லுங்கள்"** Tell to Mayor எனும் வலைத்தளமும் அங்குரார்ப்பனம் செய்து வைக்கப்பட்டது.



## 44. வெபர் மைதானத்தின் உள்ளக அரங்கானது விளையாட்டு வீரர்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.



மட்டக்களப்பு, வெபர் மைதானத்தின் உள்ளக விளையாட்டு அரங்கானது இன்று விளையாட்டு வீரர்களினதும், மாணவர்களினதும் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது. விளையாட்டு அமைச்சின் 93 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இம் மைதானமானது நேற்று (09.06.2018) மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

திறந்து வைக்கப்பட்ட உள்ளக விளையாட்டு அரங்கினுள், வைபக ரீதியாக உலகத் தமிழர் பூப்பந்தாட்ட பேரவையின் அனுசரணையுடன், மட்டக்களப்பு கல்வி வலயத்துடன் மட்டக்களப்பு பூப்பந்தாட்ட சங்கமும் இணைந்து நடாத்தும், பூப்பந்தாட்ட பயிற்சி முகாமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இத் திறப்பு விழா நிகழ்வில் மாநகர சபையின் முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகரசபை உறுப்பினர்கள், மாநகரப் பிரதி ஆணையாளர் நா.தனஞ்ஜெயன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சசினந்தன், மட்டக்களப்பு வலயக் கல்வி பணிப்பாளர் கே.பாஸ்கரன், வலயக்கல்வி பணிமனையின் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் கே.இரவீந்திரன், மாநகரசபை உத்தியோகத்தர்கள், மற்றும் பாடசாலை மாணவர்கள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர்.



## 45. சிறுவர் நேய மாநகரமாக மட்டக்களப்பு மாநகர சபை



கௌரவ மாநகர முதல்வரின் சிந்தனைக்கு அமைவாக சிறுவர்களின் பாதுகாப்பு அவர்களின் சுதந்திரமான வாழ்வியல் முறைகள் என்பவற்றினைக் கருத்தில் கொண்டு மட்டக்களப்பு மாநகரமானது சிறுவர் நேய மாநகரமாக மாற்றியமைக்கப்படவுள்ளது. பல வளர்முக நாடுகளில் மேற்படி சிறுவர் நேய மாநகரங்கள் அமையப்பெற்றிருந்தாலும், இலங்கையில் முதல்முறையாகவும் ஏனைய மாநகரக சபைகளுக்கு எடுத்துக்காட்டாக மேற்படி திட்டம் அமையப்பெறவுள்ளது.

சிறுவர் சினேக மாநகரை உருவாக்கும் கனவினை நிறைவேற்ற யுனிசெப் நிறுவனமானது முன் வந்துள்ளது. இதற்கான முதற்படியாக மாநகர பாலர் பாடசாலைகள், சிறுவர் பூங்காக்கள் போன்றவை மாற்றியமைக்கபடவுள்ளன.



குறிப்பாக மாநகருக்குள் வாழும் சிறுவர்களின் திறன் விருத்தி சிறுவர்களின் மகிழ்ச்சியான வாழ்க்கை முறையை மாற்றியமைப்பதன் ஊடாக அவர்களை எதிர்காலத்தில் சமூகப் பொறுப்பு மிக்க நற்பிரஜைகளாக வளர்த்தெடுக்க கூடிய விதத்தில் அச்சிறுவர் சினேக மாநகரம் எனும் திட்டம் அமையவுள்ளது. அதுமட்டுமன்றி தற்கொலை சிந்தனைகள், போதைப்பொருள் உள்ளிட்ட பாவனைகளை எதிர்கால சந்ததியினரிடமிருந்து களைந்து அவர்களை உலக சவால்களை எதிர்நோக்கும் துணிச்சல் மிக்கவர்களாக உருவாக்க தான் விரும்புவதாகவும், இனிவரும் காலங்களில் சிறுவர்கள் தனியாக எமது மாநகருக்குள் நடமாடுவதற்கும், பெரியவர்களைப் போல் அவர்களும் தமது தேவைகளை நேரடியாக மாநகரசபை உள்ளிட்ட திணைக்களங்களை அணுகி பெற்றுக் கொள்வதற்குமான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.



# 46. வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரணப் பணிகளில் மாநகர சபை

கடந்த வருடம் மார்கழிமாத இறுதிப்பகுதியில் அண்மையில் ஏற்பட்ட அசாதாரண காலநிலையை அடுத்து வட மாகாணத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான ரீதியில் நிவாரணப் பொருட்களை சேகரித்து வழங்கும் நடவடிக்கையில் மட்டக்களப்பு மாநகர சபையானது ஈடுபட்டது.




குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாக தமது உணவு, உடை, உறையுள் என்பவற்றை இழந்து நிர்க்கதியான நிலையில் அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ள தமிழ் உறவுகளுக்கு மனித நேய அடிப்படையில் உதவும் முகமாக மேற்படி நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு. உரிய மாவட்ட செயலகங்களின் ஊடாக பாதிக்கபட்ட மக்களின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டன.







## 47. மாநகர சபையுடன் இணைந்து செயற்பட்டு வரும் தொண்டர் குழுக்கள்



மட்டக்களப்பு மாநகர சபையின் மக்கள் சார்ந்த நலத்திட்டங்களை மேலும் வினைத்திறனாக கொண்டு செல்லும் நன்நோக்கத்தோடு துறைசார் வல்லுனர்களும், சமூக மட்ட அமைப்புகளும் மாநகர சபையுடன் தொண்டரடிப்படையில் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

இவர்கள் நகரத் திட்டமிடல், இளைஞர் யுவதிகளை வலுப்படுத்தும் செயற்றிட்டங்கள், சுற்றுச் சூழல் பராமரிப்பு, கலை கலாசாரம் மற்றும் தகவல் தொழிநுட்பம் என பல்துறைகளில் தமது பங்களிப்புகளையும், ஆலோசனைகளையும் வழங்கி வருவதோடு அது தொடர்பான செயற்றிட்டங்களையும் முன்னெடுத்துச் செல்கின்றனர்.


### பொறியியல் நிபுணத்துவக் குழு

துறைசார் திறன்களையும், அனுபவங்களையும் கொண்ட பொறியியலாளர் குழுவானது மட்டக்களப்பு மாநகரின் கட்டுமானங்கள் தொடர்பான திட்டமிடல்களையும், ஆலோசனைகளையும் மாநகர சபைக்கும் மாநகர முதல்வருக்கும் தேவையான வேளைகளில் வழங்கி வருகின்றது. இவர்களின் திட்டமிடல்களுக்கு ஏற்ப பல செயற்றிட்டங்களை மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் இலகுவாக மேற்கொள்ள முடிவதுடன் தூரநோக்குடன் அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்க முடிகின்றது.





## உளவியல் ஆற்றுப்படுத்தல் மற்றும் வழிகாட்டல் குழு



மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்து வரும் தற்கொலைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும், தொழில் வாய்ப்புகளற்று மனவிரக்தியுடன் இருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்கும் நோக்கிலும் ஓர் தொண்டர் குழு மாநகர சபையுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது.

இந்தக் குழுவானது தமது செயற்பாடுகளை நம்பிக்கையுடனும், துரிதமாகவும் மேற்கொள்ளும் வகையில் ஓர் இணைய மென்பொருள் (Counselors.lk) ஒன்றினை நிறுவும் பணிகளிலும் ஈடுபட்டுவருகின்றது.





அத்துடன் மாநகர சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் பொதுமக்களுடனான தொடர்பாடல் (Public Relationship) பற்றிய ஊக்கப்படுத்தும் செயலமர்வுகளையும் (Motivational sessions) நடாத்தி வருகின்றது.

## சுற்றுச் சூழல் பராமரிப்பு



இயற்கை வளங்களையும், இயற்கையின் சமநிலையினையும் பேணும் வகையிலும் மாநகரத்தினை பசுமை நகரமாக மாற்றியமைக்கும் நோக்கிலுமாக மாநகர முதல்வரின் எண்ணக்கருவில் உருவான பத்து இலட்சம் மரங்களை நடும் செயற்றிட்டத்தில் மாநகர சபையுடன் **UNICEF, AMCORE, I Community** போன்ற அரச சார்பற்ற அமைப்புகளும் இணைந்து பணியாற்றுகின்றன.

அத்துடன் இத்தகைய செயற்பாடுகளில் ஏனையோரையும் ஈடுபடுத்தும் நோக்கில் நடப்படும் மரங்களின் வளர்ச்சியினைக் கண்காணிப்பதற்காக www.letsmapgreen.com எனும் இணையத்தளமும் I Community சமூகத்தினரால் முகாமை செய்யப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.








## தகவல் தொழிநுட்ப தொண்டர் அணி

நவீன தொழிநுட்பத்துடன் கூடிய ஓர் மாநகரை கட்டியெழுப்பும் நோக்கோடு மட்டக்களப்பு மாநகர சபையானது காலத்தின் தேவையறிந்து பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.


இதன்படி மட்டக்களப்புக்கென தகவல் தொழிநுட்ப மையம் **(IT Incubator)** ஒன்றினை ஸ்தாபிக்கும் பணியினை முன்கொண்டு செல்வதற்காக தகவல் தொழிநுட்பத் துறையில் தேர்ச்சி பெற்ற ஓர் தொண்டர் குழுவானது மாநகர சபையுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது.



குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுப்பதுடன், புத்தாக்க கண்டுபிடிப்பாளர்களையும் இனங்கண்டு அவர்களை ஊக்குவிக்கும் பணிகளும் இதன் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளன.




அத்துடன் நவீன தொழிநுட்பத்துடன் பாதுகாப்பான போக்குவரத்து வசதிகள், மற்றும் இணையத்தளத்தின் ஊடாக தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகளிலும் தகவல் தொழிநுட்ப துறைசார் வல்லுனர்களைக் கொண்ட இக் குழுவானது செயற்பட்டு வருகின்றது.



# 48. மாநகர சபைக்கு விஜயம் செய்த பிரமுகர்கள்:

## 1. ஐக்கிய இராச்சியத்தின் அரசியல் பிரமுகரின் வருகை (18.04.2018)





## 2. இந்தியாவிற்கான பிரதி உயர்ஸ்தானிகரின் வருகை (05.06.2018).






## 3. கனடாவிற்கான வதிவிட பணிப்பாளரின் வருகை (04.07.2018)






## 4. அவுஸ்ரேலிய நாட்டின் உயர்ஸ்தானிகரின் வருகை - (17.07.2018)







## 5. இலங்கைக்கான ஜப்பானிய உயர்ஸ்தானிகரின் வருகை - (02.08.2018)





## 6. சிங்கப்பூர் பிரதி உயர்ஸ்தானிகரின் வருகை




சிங்கப்பூர் பிரதி உயர்ஸ்தானிகர் உடனான சந்திப்பின் மூலம் ரூபா 20 மில்லியன் பெறுமதியான 3500இற்கும் மேற்பட்ட புத்தகங்கள் மாநகர பொதுநுலகங்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன.

7. பருத்தித்துறை பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் உள்ளிட்ட குழுவினருடனான சந்திப்பு - (19.11.2018)




8. ஒஸ்லோ மாநகர பிரதி முதல்வர் ஹம்சாயினி குணரெட்னம் அவர்களின் வருகை - 09.01.2019



9. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உத்தியோகத்தர்களுடனான சந்திப்பு - 11.01.2019




## 10. பொலன்னறுவை மாநகர முதல்வரின் வருகை 25.01.2019





## 11. ஒக்ஸ்பார்ம் பிரதிநிதியின் வருகை 06.02.2019






## 12. யுனிசெப் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியின் வருகை 12.02.2019





# மட்டக்களப்பு மாநகரத்தை 100 மடங்கு அபிவிருத்தி செய்வதற்கான 1000 நாள் வேலைத்திட்ட முன்மொழிவுகள்



## கனவு - நம்பிக்கை - திட்டமிடல் - உழைப்பு - விடாமுயற்சி - வெற்றி

01 Cable Car System



02 Solar Parking




03 Traditional Market



04 Theme Park



05 Aquarium






09 Crocodile Park



10 Birds Park



11 Lake Restaurant



12 Floating House



13 Comfort center




06 Rabbit Park



17 Hanging Bridge



18 Bridge



14 Heritage Museum



07 Tree House



19 Cultural Auditorium




20 Drainage System



15 Cricket Stadium



08 Elephant Park



21 Floating Market



22 Water Dance



16 Turtles Island Park



23 MCB Head Office

24 Condominium Appr.

25 Grade for Hotels

26 System & Process